Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு - 17 | 20 ஆகஸ்ட் 2001 | விலை:- 10.00

நோயாளி ஒருவன் தான் நலமாக இருப்பதாக நம்புவானாகில் அவன் தவறிழைக்கிறான் என்பதை முதலில் உணர்த்துவது தேவையாகும்.

# அரசியல் இரசாயன மாற்றங்களால் சர்வஜன வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

சர்வஜன வாக்கெடுப்பை அக்டோபர் 18ம் திகதிக்கு ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளார். சர்வஜன வாக்கெடுப்புக்குப் போகாமலே சக கட்சிகளுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் சாத்தியம் இருப்பதாக கருதுவதால் தான் ஜனாதிபதி அத்தகைய முடிவை எடுத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் கூறுகிறது.

ஜனநாயக உள்ளடக்கமற்ற 1978அரசியல் யாப்பை மாற்றவும், ஜனநாயக உள்ளடக்கம் கொண்ட புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டு வரவும் எதிர்க் கட்சிகள் ஒத்துழைப்பை வழங்கினால் சர்வஜன வாக்கெடுப்பு என்ற பிரமாண்டமான நடவடிக்கை தேவையில்லை என்ற கருத்து ஏற்புடையதாயிருக்கும்.

ஜே.வி.பி.யுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து ஜனாதிபதியினால் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஜே.வி.பி.யின் கதையை இங்கு எவ்வாறு நம்புவது என்பதுதான் பிரச்சினை. சிஹல உறுமய, ஜே.வி.பி. ஆகியவை புதிய அரசியல் யாப்பு என்பது நாட்டைப் பிரிக்கும் அபாயத்திற்கு இட்டுச்செல்லும் என்ற பேரினவாத பிரச்சாரத்தையே மேற்கொண்டுவருகின்றன. அவ்வாறான ஜே.வி.பியை நம்பவேண்டிய ஒரு நிலைமை இந்த அரசாங்கத்துக்கு ஏற்படுமானால் இனப்பிரச்சினைத் தீர்வைக் கருத்தில் கொண்ட ஒரு புதிய அரசியல் யாப்பை உருவாக்குதல் என்னும் விடயம் தற்காலிகமாகவேனும் புதைக்கப்பட்ட ஒன்றாகவே அமையும்.

ஐ.தே.க.வைப் பொறுத்தவரை அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த சர்வாதிகார அரசியல் யாப்பு கிழிக்கப்படுவதில் உடந்தையாக இருக்க அவர்கள் விரும்பவில்லை. அதுவும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அரசியல் யாப்பு மாற்றமேற்படுவதை யு.என்.பி விரும்பவில்லை.

யு.என்.பியினர் இப்போதிருக்கும் அரசியல் யாப்பில் தமக்கு தற்போது வசதியாக இல்லாதவற்றை மட்டும் கழற்றிவிடவே விரும்புகிறார்கள்.

சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி பதவியை மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இல்லாத நிலையில் கைப்பற்ற முடியாததாலேயே அதனை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கிறதே தவிர அதன் ஜனநாயக விரோத தன்மைக்காக அல்ல.



ஜனநாயகத்திற்கான வரைவிலக்கணமும், மனித உரிமைகளுக்கான வரைவிலக்கணமும் வெவ்வேறு அரங்குகளில் வெவ்வேறு விதமாகவே அர்த்தப்படுத்தப்படுகின்றன.

வடக்கு-கிழக்கில் நாளாந்தம் எத்தனைபேர் செத்துக் கொண்டிருக்கிறார்கள்? எத்தனை இளைஞர்களும் யுவதிகளும் சித்திரவதைகளை அனுபவிக்கிறார்கள்?

நடமாடும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டதால் எவ்வாறு மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள்? எத்தனைபேர் அகதி முகாம்களில் அடைபட்டுக் கிடக்கிறார்கள்?

ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் மதிக்கப்பட்டதேயில்லை. தமிழர்கள் இந்த நாட்டில் சரிநிகர் சமானமாக அங்கீகரிக்கப்பட்டதேயில்லை. இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற முத்திரையுடன் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முயற்சிகள் அனைத்திலும் பாரபட்சங்கள். அடுத்தடுத்துக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவன்முறைகளினால் வடக்கிற்கும் கிழக்கிற்கும், பின்னர் வடக்குக் கிழக்கிலிருந்து நாட்டை விட்டு வெளியேயும் துரத்தப்பட்டிருக்கிறார்கள்.

கட்டாயமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் பலர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டதும், பலர் வீதியில் பிச்சையெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதும் இந்த ஐ.தே.க. ஆட்சியில்தான் அதே ஐ.தே.க இப்போது பாராளுமன்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால்தான் இந்த நாட்டின் ஜனநாயகம் பறிக்கப்பட்டு விட்டதாக ஊளையிடுகிறது. ஐ.தே.கவின் பரம்பரைக் கூட்டாளிகளான பண மகாராஜாக்களும் இப்போது கூட்டுச் சேர்ந்து நிற்கும் சில பேனா ராஜாக்களும் அதற்கு இட்டுக்கட்டிப் பாட்டுப்பாடுகிறார்கள்.

ஐ.தே.கா.வின் ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானது வருத்தத்துக்குரியதே. ஆனால், அதனை இந்த நாட்டில் அசாதாரணமான ஒன்றாகக் காட்ட முற்படுவதுதான் வேடிக்கை.

தொடர்ச்சி 02 ம் பக்கம்

## யுத்தத்தை நிறுத்துங்கள்! மனித நேயத்திற்கு மதிப்பளியுங்கள்!!

### ஊடகவியலாளர்கள் கோரிக்கை

ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாக இலங்கையில் இடம்பெறும் கொடூரமான யுத்தம் காரணமாக பாரிய மனித உயிர் அழிவுகளும் சொத்து அழிவுகளும் இடம்பெறுவதை ஊடகவியலாளர்கள் என்றவகையில் நாம் தொடர்ந்தும் பாராமுகமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எமது நாட்டுப் பிரஜைகளின் ஒரு பகுதியினராகிய தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்காமை காரணமாக உருவாகிய அரசியல் பிரச்சினைக்கு யுத்த நடவடிக்கைகள் மூலம் தீர்வு காண்பதற்கு இதுவரை மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளமை தெளிவு. அதே சமயம், அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு யுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஒழுக்கவியல் ரீதியிலும் நாம் அங்கீகரிக்க முடியாது.

எமது நாட்டில் இடம்பெறும் இக்கொடூர யுத்தம் காரணமாக மனித உயிர்களும் சொத்துக்களும் மாத்திரம் அழித்தொழிக்கப்படவில்லை. அழித்தொழிக்கப்பட்ட மனித உயிர்களின் எண்ணிக்கையையும் சொத்துக்களின் பெறுமதியையும் மதிப்பீடு செய்ய முடியும். ஏற்கனவே, பல அமைப்புக்கள் இது பற்றிய மதிப்பீடுகளைச் செய்துள்ளன.

ஆனால் எத்தகைய புள்ளி விபரங்களுக்கும் உள்ளடக்கப்படாத மிக முக்கிய காரணி எமது சமூகத்திலிருந்து விலகிச் செல்லும் மனித நேயமாகும். இனங்களுக்கிடையேயான நல்லுறவு, பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பரஸ்பரம் நிலவ வேண்டிய புரிந்துணர்வும் நம்பிக்கையும் ஆட்டங்கண்டுள்ளன. முழுச் சமூகக் கட்டமைப்பும் சீரழிந்துள்ளமை பற்றி ஏராளமான உதாரணங்களைச் சுட்டிக் காட்ட முடியும். கொடூரமான குற்றச் செயல்கள் சமூகத்தில் அதிகரித்துள்ளன. "சட்டத்தின் நியாயாதிக்கம்" "நீதியின் முன்னே அனைவரும் சமம்" என்ற நாகரீகமான சமூகங்களின் அடிப்படை விழுமியங்கள் கூட பரிகசிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது.

எந்த இனத்தை மதத்தைச் சார்ந்த குழுமமாயினும் அனைத்துப் பிரஜைகளும் யுத்த செலவினத்தை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். எனவே, யுத்தம் என்பது எமக்கு எதிராக எமது உழைப்பையும் வியர்வையையும் ஈடுபடுத்துவதாகும்.


எம் நாட்டுப் பிரஜைகளின் ஒரு பகுதியினர் தமது தேசியத்துவம் காரணமாக தனித்தனியாகவும் கூட்டாகவும் கொலை செய்யப்படவும், சொத்துக்களை இழக்கவும், நேரிட்ட முதல் சந்தர்ப்பம் 1983கறுப்பு ஜூலை அல்ல. இறுதிச் சந்தர்ப்பமும் அதுவல்ல.

இத்தகைய இனவாதத்தாக்குதல்களுக்கு உள்ளாவதற்கான வாய்ப்புக்கள் எமது சமூகத்தில் தொடர்ந்து நிலவுவதை "பிந்தனுவெவ தடுப்பு முகாம் படுகொலைகள்" "மாவனெல்லையில் இடம் பெற்ற முஸ்லீம் மக்களுக்கெதிரான வன்செயல்கள்" என்பன சாட்சி பகர்கின்றன.

தொடர்ச்சி 02 ம் பக்கம்

## நம்காலத்து நாயகி போய்வருக!


சேகர் கபூரால் இயக்கப்பட்ட "பண்டிட் குயின்" திரை ஓவியத்தின் நிஜ உலக நாயகி. அவருடைய வாழ்க்கை எவ்வளவுதான் சர்ச்சைக்குரியதாக இருப்பினும் அவர் சாதி ஒடுக்குமுறை, பெண் ஒடுக்குமுறை என்பவற்றிற்கு எதிரான சின்னமாக திகழ்ந்தார். அவர் புழுதியிலும், காரிருளிலும் பயணித்தே எழுந்து வந்தார். அவரது மறைவுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.



பூலான்தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## தேவை உருப்படியான தலைமைத்துவம்

இந்த நாட்டில் எந்தப் பகுதியிலும் பாதுகாப்பு இல்லை என்பதை உறுதிப்படுத்துவதாகவே கட்டுநாயக்கா அனர்த்தங்கள் அமைந்திருந்தன.

இந்த அனர்த்தங்களுக்கு மத்தியில் கரணம் தப்பினால் மரணம் என்ற சூழ்நிலையில் எரிமலையின் மீது கம்பளம் விரித்து கைகோர்த்து நடனமாடுவது போல்தான் எமது நாட்டின் அரசியல் தலைமைத்துவங்களின் செயற்பாடுகள் அமைகின்றன.

எந்தப் பிரச்சினையுமே அற்ற ஒரு நாட்டில் நடந்துகொள்வது போலவே இந்த நாட்டிலுள்ள பல தலைமைத்துவங்கள் அரசியல் வாணவேடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அவற்றிற்கு இனப்பிரச்சினையால் நாட்டின் ஒருபகுதி மக்கள் அனுபவிக்கும் வேதனைகளையோ, நாடுமுழுவதும் பொருளாதாரச் சுமையால் திணறுவது பற்றியோ எதுவித அக்கறையும் கிடையாது.

இனப்பிரச்சினை தீர்வுபற்றி தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் இந்த நாட்டின் மக்களுக்கு அமைதியையும், சமாதானத்தையும் அவசர, அவசியமாகத் தேடிக்கொடுக்க வேண்டிய காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியிலும், இனவெறிக் கூச்சல்களிலும் இந்த சக்திகள் ஈடுபட்டுள்ளன.

சர்வதேச சமூகம் குறிப்பாக இந்தியா அண்மைக்காலத்தில் இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. இந்திய தூதரக மட்டத்திலிருந்தும், வெளியுறவுச் செயலாளர் சோகிலா ஐயர் வரை அண்மைக்காலத்தில் இந்தக் கருத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளும், ஸ்கண்டிநேவிய, வட அமெரிக்க நாடுகளும் இதனையே வலியுறுத்துகின்றன.

சர்வதேச உள்ளூர் சமூகங்களின் அபிலாசைகள் இப்படி இருக்கையில் ஐ.தே.க இதனைப்பற்றி மூச்சுக்காட்டுவதில்லை. ஆனால் தமிழ் கட்சிகள் இதன் பின்னால் அணிதிரண்டு வருகின்றன. இது தமிழ் அரசியலின் பாரம்பரியமே. 50 வருடங்களில் அதிக காலம் ஐ.தே.க.விற்கு உதவியதே தமிழ் அரசியல்.

ஜே.வி.பி.யோ, சிஹலஉறுமயவோ இனப்பிரச்சினை தீர்வுக்கான எந்த முயற்சியும் நாட்டைப் பிரிக்கும் அபாயம் என்று கூறிவருகின்றன.

இந்த நிலையில் அதிகாரப் பகிர்வுக்கான எந்த முயற்சியிலும் இடதுசாரி ஜனநாயக சக்திகளும், தமிழர் நலனில் அக்கறையுள்ள சக்திகளும் தீவிர ஈடுபாடு காட்ட வேண்டும்.

இன்னும் பல ஜுலை கலவரங்களின் பின்னர்தான் அரசியல் தீர்வு சாத்தியமாகும் என்றால் அது கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வது போலாகும்.. காலம் கடத்தும் ஒவ்வொரு கணமும் அழிவுகளே அதிகரித்துச் செல்லும்.

## அரசியல் இரசாயன மாற்ற..........

1ம் பக்கத் தொடர்ச்சி

கொக்கட்டிச் சோலை இறால் தொழிற் சாலையின் தொழிலாளர்களை வரிசையாக நிறுத்திச் சுட்டுக்கொலை செய்தது தொடக்கம் சத்துருக்கொண்டான் அகதி முகாமில் இருந்த தமிழர்களை அப்படியே அள்ளிக்கொண்டு போய் படுகொலை செய்த சம்பவங்கள் உட்பட எத்தனை சம்பவங்கள் நடந்தன. அப்போது எப்போதாவது இந்த ராஜாக்கள் கண்ணீர் வடித்ததுண்டா?.

இந்த பம்மாத்து பேர்வழிகள் ஜனநாயகத்தின் காவல்கள் போல் வேஷமிட்டுக் கொள்பவர்கள். மகாராஜாக்கள், மகேஸ்வரன்களைத்தான் விடுவோம். அவர்கள் அப்படித்தான். ஆனால் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லித்திரியும் பேர்வழிகள் ஐ.தே.க தமது கச்சையை உருவ அனுமதித்துவிட்டு அவர்கள் பின்னால் ஓடித்திரிகிறார்களே.

மோட்சத்திற்கு அழைத்துச் செல்லும் பரமபிதாவாக ரணில் இவர்களின் மனக்கண்ணில் நிழலாடுகிறார்.

தமிழ் மக்களின் ஜனநாயகம் பறிக்கப்பட்டதை, தமிழ் பிரதேசங்கள் சுடுகாடாக்கப்பட்டதை மறந்து பாராளுமன்றம் இடைநிறுத்தப்பட்டதற்காக ரணிலுக்குப் பின்னால் கொண்டாட்டம் போட்டுத்திரிகிறார்கள்.

ஜனநாயக மீறல் என்று அதிர்ச்சிக் குரல் எழுப்பும் இவர்கள் வவுனியா அகதி முகாம்களிலும், தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியிலும் வலிகாமத்திலும் உள்ள அகதி முகாம்களிலும், மன்னார் மற்றும் திரு மலையிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதி முகாம்களில் அகதிகளாக அவலப்படும் தமிழ் மக்கள் பற்றி அலட்டிக் கொண்ட துண்டா? யு.என்.பி ஓர் அனுதாபக் குரலாவது எழுப்பியது உண்டா?

கொழும்பில் அரசாங்கத்தின் விடுதிகளில் அரசாங்கத்தின் பாதுகாப்பில் வாழும் வெள்ளை வேட்டி கனவான் தலைவர்களுக்கு எமது சமூகம் நிர்க்கதியாக நின்றுகொண்டிருப்பது தெரியுமா? இதைத்தான் சொல்வது "ஆச்சி கிண்ணிப் பிச்சையெடுக்க தம்பி கும்பகோணத்தில் கோதானம் பண்ணுறான் எண்டு"

அந்தந்தக் கட்சியினர் அவர்கள் சார்ந்த பிரிவினரின் நலன்களிலிருந்து செயற்படுகையில் தமிழ்க் கட்சிகள் தமிழர்களின் நலன்களிலிருந்து செயற்படவில்லை என்பதே உண்மையாகும்.

ஆனால் அவை "பொறி ஐந்தும் கலங்கி" ரணிலின் பின்னால் வலம் வந்து கொண்டிருகின்றன. இந்த கொள்கையற்ற, பொறுப்புணர்வற்ற அரசியல் தான் துரதிஷ்டவசமாக தமிழ் மக்களை கடந்த 55 ஆண்டுகளில் இன்றைய நிலைக்கு இழுத்து வந்தது.

* தமிழர்களைப் பொறுத்தவரை தேவையானது ரணில் பதவிக்கு வருவதல்ல.

* இருபெரும் சிங்களக் கட்சிகளும் தேசிய அரசாங்கம் என்ற பெயரில் அமைக்கும் ஆட்சி அதிகாரமுமல்ல.

* இன்றைய தேவை தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலுக்கான வாய்ப்புக்கள் ஏதும் இருந்தால் அவற்றைப் பயன்படுத்துவது.

தற்போதைய நெருக்கடி நிலையில் தான் புதிய அரசியல் யாப்பு பற்றி சிந்திக்கப்படுகிறது. இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமானது அதுவே.

தற்காலிகமாக சர்வஜன வாக்கெடுப்பு இடைநிறுத்தப்பட்டாலும் அரசியல் யாப்பை மாற்றுவதே அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் பிரதான இடத்தைப் பிடித்திருக்கிறது. எனவே அதைப் பற்றியே தமிழர்கள் பிரதானமாக அக்கறை செலுத்த வேண்டும்.

அந்த விடயத்திற்கு சகல ஜனநாயக உணர்வுகொண்ட கட்சிகளும் ஒத்துழைத்து பங்களிப்பார்களானால் அதுவே மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

அல்லாமல் அதற்கு எதிராகச் செயற்படுபவர் எவராயினும் அவர்களின் முயற்சிகளை முறியடித்து முன்னேற சகல சட்டபூர்வமான வழிமுறைகளையும் பிரயோகிப்பதே சமூக உணர்வு மிக்க அரசியல் சக்திகளின் கடமையாகும்.

## யுத்தத்தை நிறுத்துங்கள்..........

1ம் பக்கத் தொடர்ச்சி

மனிதக் குண்டுகள் மூலம் இடம்பெறும் படுகொலைகள், எல்லைப்புற கிராமங்களில் வாழும் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுதல், மிதி வெடிகள், விமானத்திலிருந்து பொழியப்படும் குண்டுகள், எறிகணைகள் போன்ற பல்வகைத்தாக்குதல்களால் கொலையுண்டழிந்து போவோர் எமது நாட்டின் சொந்தப் பிரஜைகளேயாவர்.

கறுப்பு ஜுலைக்குப் பின்னர் இவ்வாறாக ஏற்பட்ட பல அழிவுகளை தெளிவாகக் காணத் தவறியமைக்கு முக்கிய காரணம் இக் கொடிய அழிவு யுத்தமேயாகும். எனவே, ஊடகவியலாளர்கள் என்ற வகையில்நாம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு சாராருக்கும் பின்வரும் வேண்டுகோளை விடுக்கிறோம்.

யுத்தத்தை நிறுத்துங்கள்! மனித நேயத்திற்கு மதிப்பளியுங்கள்!!

நாட்டு மக்கள் அனைவருக்கும் பின்வரும் வேண்டுகோளை விடுக்கிறோம்.

யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவியுங்கள்! மனித நேயத்திற்கு மதிப்பளியுங்கள்!!

இந்த மகஜரில் லக்பிம, சிறீ எப். எம், சுவர்ண ஒலி, லங்காதீப, ஜா ரிவி, ஜனநாயக மாசிகை, பலய, சத்திய, சாமவிமர்சி, ஆதவன், கண்ணோட்டம், சன்டே டைம்ஸ், தினமின, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினி, மூன்றாவது மனிதன், சரிநிகர், தினகரன், புதிய பூமி, அமுது, விபவி, சலனம், மற்றும் சுதந்திர ஊடகவியலாளர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

## நினைவு கூருகிறோம்



"தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற, இந்த நாட்டில் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட கட்சியான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவராக இருந்தவர் திரு பத்மநாபா. அவர்களின் கட்சியின் கருத்துக்களோடு எமக்கு மிகத் தீவிரமான வேறுபாடுகள் இருக்கலாம். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என எந்தவொரு கட்சியும் ஒரு சிறு கண நேரத்துக்குக் கூட பிரகடனம் செய்ய முடியாது என்பதையே நாம் கூறுகின்றோம். 'புனிதமான சக்திக்கே ஆட்சியுரிமை' என்னும் கோட்பாட்டை நாம் அங்கீகரிக்கவில்லை. ஆகவே, திரு. பத்மநாபாவும், அவரது கட்சியினரும் அடக்கு முறைகளிருந்து தமிழர்களை விடுவிப்பதற்காக மேற்கொண்ட நன்முயற்சிகள் அத்தனையையும் பாராட்டுகின்றோம்.

ஜனநாயகப் பாதையில் செயற்படும் எந்தவொரு கட்சிக்கும் அதனது அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்குப் பூரண உரிமையுண்டு. ஆயுதம் கொண்டு அதனைத் தடுத்து நிறுத்த எவருக்கும் உரிமை கிடையாது. எவராவது தமக்கு மாறான அபிப்பிராயங்களையும் எதிர்ப்புக்களையும் ஆயுதம் கொண்டு அடக்கிவிட முயற்சிப்பாரானால். அது அரசியல்ரீதியாக தனது எதிர்ப்புக்களை முறியடிப்பதற்கு அவருக்கிருக்கும் இயலாமையையும், வரட்டுத் தனத்தையம் பிரகடனப்படுத்துவதே ஆகும்"

திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் பிறந்ததின நினைவுநாளில் (12.08.2001) எம் நிவைக்கு வந்த அவரது கருத்துக்களே அவை.

## இரங்கல்

### தோழர் ஜோதி
### சண்முகம் ஜோதிவேல்

தோழர் ஜோதி அவர்கள் தமிழ்நாடு மணப்பாறையில் காலமானார்.

நாவலப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட தோழர் ஜோதி 1980 களின் நடுப்பகுதியிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இணைந்து பணியாற்றியவர். மலையகத்திலும், திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும் அவர் சமூக வேலைகளில் ஈடுபட்டிருந்தார். கண்டி "சத்தியோதயா" விலும் பணி செய்தார். சிறீலங்கா சிறைகளில் சித்திரவதைகளை அனுபவித்தவர். 1990இல் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்ற தோழர் ஜோதி புழல் அகதி முகாமிலும் வேறு பல இடங்களிலும் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் தளரா உறுதியுடன் வாழ்ந்தவர். அவர் சிறந்த குரல்வளமுள்ள கலைஞர் அன்னாரின் மறைவிற்கு கண்ணோட்டம் தனது அஞ்சலியை செலுத்துகிறது. அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 27118

141A, மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த நண்பர்களே!

# அன்பார்ந்த நண்பர்களுக்கு

அ. வரதராஜப்பெருமாள்

## எழுதும் கடிதம் ~ 12

உங்கள் அனைவருக்கும் எனது இந்த பன்னிரண்டாவது கடிதத்தின் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் வாழும் சூழ்நிலை மிகவும் ஆபத்துக்கள் நிறைந்தது என்பதில் புதினமொன்றுமில்லை. இங்குள்ள அரசியற் சூழல் முன்னெப்போதையும்விட மிகவும் சிக்கலானதாகவும், குழப்பமானதாகவும் உள்ளது. இங்குள்ள நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமானதல்ல. அப்படித்தான் சிரமப்பட்டுப் புரிந்து கொண்டாலும் அதனை மற்றவர்களுக்குப் புரிய வைப்பதென்பது கல்லை உருக்கி வார்க்க முனைவது போன்றதாகும்.

ஏனெனில் இங்கு அன்றாட நிகழ்ச்சிகளே மக்களின் மனங்களை ஆக்கிரமித்திருக்கின்றன. கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாக நடைபெற்றுவரும் யுத்த அரசியலை மொத்தமாகத் தொகுத்து, பகுத்துப்பார்க்கும் நிலையிலே அவர்கள் இல்லை. இலங்கையின் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இனவாத அரசியலின் தன்மைகளையும் போக்குகளையும் வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலேயே மக்கள் உள்ளனர்; உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையானவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் இருமுனை மூலோபாயத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஒன்று புலிகளின் எதிப்பைச் சம்பாதிக்கக்கூடாது. மற்றொன்று மக்களின் அன்றாட துன்பங்களை அரசாங்கத்துக்கு எதிரான உணர்ச்சி அரசியலாக்கிக் கொள்வது. *நேர்மையாக நடந்து கொள்ள முற்படுவதோ, உண்மைகளை ஒழிவு மறைவின்றிப் பேசுவதோ அத்துடன் எதிலும் இருக்கக்கூடிய சாதக பாதகங்களை தர்க்க ரீதியாகவும், பகுத்தறிவு பூர்வமாகவும் சிந்தித்து அதன்படி நடக்க முற்படுவதோ இங்கு தோல்வியைத் தழுவுவதற்கான அணுகுமுறைகளாகவே உள்ளன.* அதுமட்டுமல்ல பெரும்பாலானோரின் வெறுப்புக்கும், கோபத்துக்கும் உள்ளாக வேண்டியும் ஏற்படுகின்றது. அத்துடன் மலினமான அரசியல் நடத்துபவர்கள் வெகு இலகுவாக சேற்றைவாரி இறைப்பதற்கும் உள்ளாக வேண்டியுள்ளது.

பேச்சில் உண்மையும், நடத்தையில் நேர்மையும், சமூகத்தைப் பற்றி பொறுப்புணர்வுடன் சிந்திப்பவர்களாகவும் இருப்பவர்கள் பெரும்பாலானோர் இங்குள்ள ஆபத்தான சூழ்நிலையினால் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்கள். நாட்டிலே இருப்பவர்கள் தமது குரல்களை உள்ளே இழுத்துக் கொண்டு மௌனமாகிக் கொண்டார்கள். வெளிநாடுகளிலும் அதுதான் நிலை.

ஒரு சமூகம் ஆரோக்கியமாக வளர்ச்சியடைய வேண்டுமானால் பேசவும, எழுதவும், கூட்டம் கூடவும் சுதந்திரம் வேண்டும். நவீன சமூகங்களின் வளர்ச்சியின் அடிப்படையே இதுதான். குறைந்தபட்சம் அந்த சுதந்திரத்திற்காகப் போராடும் சந்தர்ப்பங்களாவது வேண்டும். மாற்றுக் கருத்துக்களின் மோதல்கள், விவாதங்கள் இல்லாமல் ஒரு சமுதாயத்தில் அறிவு வளர்ச்சி ஏற்படமுடியாது. சரி எவை பிழை எவை என்பது பகுத்தறியப்படமாட்டா. ஒரு சமூகத்தின் அறிஞர்களே முதுகு வளைந்து தலையைக் குனிந்து தமது பேனைகளையும் சுருட்டி வைத்துவிட்டு மௌனிகளாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டால் அந்த சமூகத்தின் அழிவை யாராலும் காப்பாற்ற முடியாது. இதுதான் இன்றைய இலங்கைத்தமிழர் சமூகத்தின் நிலை.

இலங்கைத் தமிழர்களாகப் பிறந்தவர்கள் பெருமைப்பட இன்று எது மிச்சம் வைக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச விமான நிலையங்களில் இன்று மிக மோசமான அளவுக்கு சந்தேகங்களுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாக்கப்படுவதைக் கண்டு பெருமைப்படவா? உலகில் நண்பர்களே இல்லாத ஒதுக்கப்பட்ட, தீண்டத்தகாத சமூகமாக ஆகிவிட்ட தனித்துவத்தைக் கண்டு பெருமைப்படவா? சொந்த சமூகத்தில் ஆயிரக்கணக்கில் அரசியல் தலைவர்களும், கல்விமான்களும், நிர்வாகிகளும், இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டு முதுகெலும்பில்லாத ஊனச் சமூகமாக ஆக்கப்பட்டுவிட்டதைக் கண்டு பெருமைப்படவா? அல்லது சர்வதேச வல்லரசுகள் சிறீலங்கா அரசோடு தமது கணக்கைச் சமப்படுத்திக் கொள்வதற்கான கருவியாக தமிழர்களின் சாவுகள் ஆகிப் போய்விட்டதைக் கண்டு பெருமைப்படவா?

இன உணர்வையும், எல்லை ரீதியான அடிப்படையையும் கொண்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் அதன் முற்போக்கான பாதையில் இருந்து சிறிது விலகினாலோ அல்லது பிழையான தலைமைகளின் செல்வாக்கின் கீழ் வந்துவிட்டாலோ அப்போராட்டம் மிகவும் பிற்போக்கானதாகவும் ஆக்கப்பூர்வமான முன்னேற்றமெதனையும் தராததாகவும் அமைந்துவிடும் என்பது பற்றிய புரிதல், இந்தப் போராட்டம் ஆரம்பித்த சில ஆண்டுகளிலேயே எம்மிடையே ஏற்பட்டது. அதைத் தடுப்பதற்காகவே

**❑ சமூக பொருளாதார சமத்துவம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, சர்வதேச புரட்சிகர முற்போக்கு சக்திகளுடன் ஒன்றுபடல் போன்ற கருத்துக்களை ஈழ விடுதலை இலட்சியத்தோடு இணைத்தோம்.**

**❑ ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் வர்க்க உணர்வுகளை வளர்த்து அவர்களை அணிதிரட்ட வேண்டும் என முயற்சித்தோம்.**

**❑ ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஸ்தாபன ரீதியான கட்சி அரசியல் தலைமையைப் போராட்டத்துக்கு வழங்க வேண்டும் என்பதற்காக ஏற்பாடுகள் செய்தோம்.**

**❑ போராட்டத்தில் வெவ்வேறு அணிகள் ஈடுபடும் போது ஏதோ ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் முரண்பாடுகள் விலக்கப்பட்ட ஒற்றுமை வேண்டும் என்பதற்கான ஐக்கிய முன்னணி ஏற்படுவதற்காக தொடர்ந்து முயற்சிகளையும் மேற்கொண்டோம்.**

என்றாலும் குறுகிய கால ஓட்டத்திலேயே எமது விடுதலைப் போராட்டம் மீளமுடியாத அழிவுப் பாதைகளுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது.

**01. தமிழர்கள் மத்தியிலுள்ள உயர்சாதி செல்வாக்கு.**

**02. வெளிநாடுகளில் பிற்போக்குத்தனங்களோடும் குறுகிய சுயநலன்களோடும் வாழுகின்ற தமிழர்களின் செல்வாக்கு.**

**03. பிற்போக்குத்தனமான அரசியல் அதிகாரங்களின் செல்வாக்குக்கு உட்பட்ட தமிழ்நாடு எமது போராட்டத்தின் பின்தளமாக அமைந்தமை.**

**04. சுதந்திர ஈழம் அமைவதை ஏற்றுக் கொள்ளாத இந்திய அரசின் உதவிகளை எல்லையற்ற ரீதியில் எதிர்பார்த்து தமிழர்களின் போராட்ட அணிகள் திடீர் விரிவாக்கத்துக்கு உள்ளானமை.**

**05. மொசாட் உளவுப்படை உட்பட ஏகாதிபத்திய உளவு ஸ்தாபனங்கள் எமது போராட்ட அமைப்புக்களுக்குள் தமது செல்வாக்குகளை வளர்த்துக் கொண்டமை.**

ஆகிய காரணிகள் ஒட்டு மொத்தத்தில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அணிகளுக்கிடையில் மோதல் என்ற வடிவத்தில் தோற்கடித்துவிட்டன.

1986ம் ஆண்டு புலிகள், ரெலோ மீது யுத்தம் ஆரம்பித்து அதன் 300க்கு மேற்பட்ட உறுப்பினர்களை படுகொலை செய்த அன்றே ஈழ விடுதலைக்கான யுத்தத்தில் தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

இன்றைக்குத் தமிழர்களின்நிலை மிகவும் விசனத்துக்குரியதாகும். மூட்டையிலிருந்து அவிழ்த்துக் கொட்டப்பட்ட நெல்லிக்கனிகள் போல, மேய்ப்பனில்லாத ஆடுகள் போல ஆகிவிட்டார்கள். இப்போதும் தமிழர்களின் அரசியல் கட்சிகள் ஜனநாயக ரீதியில் ஒன்றுபட்ட ஓர் அணியை உருவாக்கி ஒரு தலைமையை வழங்க முடியும். அது சாத்தியமாகவில்லை. தமிழர் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகியவற்றின் கூட்டு சுயாதீனமற்ற ஒன்றாக புலிகளுடன் பேசித்தான் அரசாங்கம் ஓர் அரசியற் தீர்வுக்கு வரவேண்டும் எனக் கூறுகின்றன. இவர்களைப் புலிகள் தங்களின் அரசியற் பிரதிநிதிகள் என்று அங்கீகரிக்கவில்லை. அதுமட்டுமல்ல, புலிகளின் தேசத்துரோகிகள், சமூக விரோதிகள் மற்றும் மரண தண்டனைப் பட்டியலில் இருந்து இன்னமும் இந்தக் கட்சிக்காரர்கள் நீக்கப்படவில்லை. இவ்வளவு பாட்டுப்பாடியும், காவடி தூக்கியும் இவர்களின் ஜனநாயக உரிமைகளைக் கூட அங்கீகரிக்காத புலிகள் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலை நாட்டுவார்கள் என்று கூறுவது புரியாத தனமா? போலித்தனமா?

இலங்கைத் தமிழர்கள் பெரும்பாலும் இப்போதும் உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி அகதிகளாகத்தான் இருக்கிறார்கள். அகதிகள் என்று பெயர் பெறாதவர்கள் கூட திறந்தவெளி அகதி முகாம்களில் வாழ்வது போலத்தான் அவர்களின் சீவியம் அமைந்திருக்கின்றது.

இன்று இலங்கைத் தமிழர்கள் உலகம் பூராவும் பரந்துவிட்டதனால் உலகின் பல பாகங்களில் பல யாழ்ப்பாணங்களும், பல மட்டக்களப்புக்களும் உருவாகியிருக்கலாம். ஏன்? பல வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிகளும் கூட உருவாகலாம். பல்வேறு நாடுகளிலும் நல்லூர் திருவிழாவையும் மிஞ்சிய தேர்த்திருவிழாக்கள் நடக்கலாம்.

சுடச்சுட அரியாலைத் தோசை, கரையூர் பால் அப்பம், புங்குடுதீவு சோறு கறி, கொட்டடி இடியப்பம், ஆனைக்கோட்டை நல்லெண்ணெய், மட்டுவில் கத்தரிக்காய், மண்டைதீவுக் கீரை, உரும்பிராய் வடி, பலாலிக் கிழங்கு, பருத்தித்துறை வடை, ஓட்டமாவடி சட்டித்தயிர், காரைதீவு சம்பா அரிசி எனத் தமிழர்களின் கடைகள் கனடாவின் ஒட்டாவா தொடக்கம் லண்டனின் தேம்ஸ் நதியையும் தாண்டி ஐரோப்பாவின் அல்ப்ஸ் மலை அடிவாரம் வரை பரந்து விரிந்து இலங்கைத் தமிழர்களின் ஊர்ப் பெருமைகளைப் பறை சாற்றக்கூடும். அதெல்லாம் மண்ணை விட்டுப் போனவர்களின் ஆதங்கத்துக்குத் தீனி போடுவதற்கான வியாபார வடிவங்களே. அங்கு அடுத்த தலை முறை அப்படியில்லை. அவர்களை இணைப்பது ஒரு மொழியென இருக்காது, ஒரு பண்பாடென இருக்காது. அடுத்த தலைமுறை, உலகில் "எனது தேசமே சிறந்தது" என இந்தியர்கள் பாடுவது போலப் பாடிப் பெருமைப்பட அவர்களின் தேசத்தின் நிலைமையும் இல்லை. ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தமது மூதாதையரின் தாய் நாட்டை நினைத்துப் பார்ப்பதற்கு இஸ்ரேலியருக்கு இருந்தது போல தமிழருக்கு ஒரு பைபிளும் கிடையாது.

எனவே சுதந்திர ஈழம் என்பது காலம்கடந்த விடயம். அதற்காகத் தான் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தோம். அதைப் புலிகள் எனும் கோடரிக்காம்புகள் வெட்டிச் சாய்த்து விட்டன. கூரையைக்கூட வேயமாட்டாத இவர்கள் வானத்திலே கோட்டை கட்டுவார்கள் என்று ஒரு சமுதாயத்தையே அழியவிட்டு வேடிக்கை பார்க்கும் நிலைதான் இங்கு செல்வாக்குச் செலுத்துகிறது. இதிலிருந்து பெரும்பான்மையான தமிழர்கள் விடுபடவில்லையாயின், விடுவிக்கப்படவில்லையாயின் இலங்கைத் தமிழர்கள் என்னும் தேசிய இனம் அழிந்து போகும்.

## அன்பு நண்பர்களே!

*ஒன்றை மட்டும் மனந் திறந்து சொல்ல விரும்புகிறேன். இங்கு துணிச்சலான சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்களின் ஒப்புதலைப் பெற்று தமிழர்களின் அரசியல் உரிமைகளைக் காப்பாற்றினால் சரி மற்றபடி வேறு யாரும் காப்பாற்ற முடியாது என்ற நிலைமைதான் காணப்படுகின்றது. அப்படியான நிலைமைக்கே இன்று தமிழர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். அப்படிச் செயற்பட சிங்களத் தலைவர்கள் முன்வந்தாலும் இரண்டு விடயங்கள் சாத்தியமில்லை. ஒன்று தமிழர்கள் மத்தியில் காணப்படும் அதிதீவிரமான அபிலாஷைகளைத் திருப்திப்படுத்த முடியாது. இரண்டாவது தமிழ் மக்களின் அரசியற் பிரதிநிதிகளினதும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே அது நடக்க வேண்டும்.*

*இதெல்லாம் சாத்தியமா? அப்படிப்பட்ட அரசியல் நெருக்கடிகளை எந்த சிங்கள அரசியவாதிகளும், தலைவரும் எதற்காகத் தனக்குத்தானே தேடிக் கொள்ள வேண்டும். அப்பாவிச் சிங்கள மக்கள் கொல்லப்படும் போது மனிதாபிமான அடிப்படையில் அதனை கண்டனம் செய்யும் தமிழர்களை தமிழ்த் துரோகிகள் என்று பட்டம் சூட்டும் போது, தமிழர்களுக்காகக் குரல் எழுப்பும் சிங்களத் தலைவர்களுக்கும் அவர்களின் சமூகத்தில் அதுதானே கதி. சிங்களத் தலைவர்கள் மட்டும் தமது சமூகத்தில் துரோகிகள் பட்டத்தைப் பொருட்படுத்தாமல் தமிழர்களின் உரிமைகளுக்காக செயற்படவேண்டும் என எதிர்பார்ப்பது எவ்வாறு சரியானதாகும். அவ்வாறு எதிர்பார்ப்பதற்கு எங்களுக்கு என்ன தார்மீக உரிமை உண்டு.*

தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும் அளவுக்கு மிஞ்சிய பேராசை அழிவைத் தவிர வேறெதனையும் தராது என்பவற்றை நான் உங்களுக்கு விரிவாகக் கூறவேண்டியதில்லை. எமது மக்கள் மத்தியில் உண்மையும், நேர்மையும் நிலைபெற, யதார்த்தபூர்வமான சமூகச் சிந்தனை வளர்ச்சியடைய, நல்லவர்கள் நம்பிக்கைபெற நாம் மேலும் மேலும் கடுமையாக உழைக்க வேண்டும்.

இப்படிக்கு
உங்கள் நண்பன்
வரதராஜப்பெருமாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***யா**ழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் கழகம் ஏற்பாடு செய்திருந்த ஆய்வரங்கில் கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரி அதிபரும் "நான்" உளவியல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான வண. பிதா. போல் நட்சத்திரம் "அகதிகளும் மனித உரிமை சாசனமும் ஓர் ஆய்வு, அனுபவப் பகிர்வு" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.* *அந்த உரையின் முக்கிய பகுதிகள் தொகுத்துத் தரப்படுகிறது.*

# உலகப்பரப்பில் அகதிகள் நிலை



## ஓர் அனுபவப் பகிர்வு

மனித உரிமை சாசனமும் உலகப்பரப்பில் அகதிகள் நிலை பற்றிய எண்ணக்கருவும் என்ற விடயம் சகல இனத்தவரது கவனத்தையும் ஈர்த்துள்ளதை பார்க்கிறோம். மூன்று முக்கியமான கவன ஈர்ப்புக்கள் முனைப்புப் பெற்றுள்ளதையும் அவதானிக்கலாம்.

**✶ அகதிகளாக ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு யார் உரிமை கோரக்கூடியவர்கள்.**

**✶ எவ்வகையான பின்புலங்களில் அவனோ, அவளோ ஏற்றுக்கொள்ளப் படவேண்டும்.**

**✶ எவ்வாறு அவனோ, அவளோ நடத்தப்பட வேண்டும்.** அதாவது ஏற்றுக் கொள்ளப் படுகின்ற நாடுகளினால், அரசுகளினால், சமூகங்களினால் இவர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதாகும்.

தஞ்சம் கோருகின்றவர்களை இனங்கண்டு கொள்ள எவ்வித முயற்சியும் எடுக்காமல் உண்மையான அகதிகளும் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். இது ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இன்னும்கூட நடைமுறையில் உள்ள ஒரு ஒழுக்காற்று நடவடிக்கை என்று சொல்லப் படுகிறது. உண்மையான துன்புறுத்தலின் விளைவாக மேற்கத்தைய நாடுகளிலே தஞ்சம் கோருகின்றவர்களுடைய உண்மை இயல்புகளை, காரணங்களை கண்டறியாமல் அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாக சில அரசுகள் அவர்களை




வெளியேற்றிக்கொண்டிருக்கின்றன. சில அரசுகள் அடைக்கலம் கோருவதற்கான சட்ட நகல்களை இறுகிய சட்டக் கோவையாக மாற்றியுள்ளன.

சில மேற்கத்தைய நாடுகள் அகதிகள் விவகாரத்தினால், பெருந்தொகையான அளவுகளில் அவர்களை உள்வாங்கிய காரணத்தினால் தமது சொந்த மக்களின் எதிர்ப்புக்களை எதிர் நோக்கியுள்ளன.

அதாவது இந்த நாடுகளுடைய அரசாங்கங்களுக்கு அவர்களுடைய சொந்த மக்களாலேயே பெரும் அரசியல் நெருக்கடிகள் உருவாக்கப்படுகின்றன. ஏனென்றால்,

**1. அகதிகள் எங்களுடைய நாட்டின் செல்வங்களையும், வாய்ப்புக்களையும் விழுங்குகின்றார்கள்.**

**2. இதனால் எமது பொருளாதார, மனித அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டிய ஏராளமான நிதி செலவழிக்கப்பட்டு நாடு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது.**

**3. சில நாடுகள் கருணைகாட்டி களைத்துப் போனார்கள்.**

இது எங்களுக்கு இனி மேலும் இயலாது ஆகவே வேறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள்.

இதனால் அகதிகள் உள்ளே நுழையாமல் தடுப்பதற்கு மேற்கத்தைய அரசாங்கங்கள் சட்டங்களை இறுக்க வேண்டிய அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்படுவதை நாங்கள் காண்கிறோம்.

சர்வதேச சட்ட நகலில் பின்வரும் உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையாக கணிக்கப் படுகின்றன. அவை அரசுகளின் மீதுள்ள பொறுப்புக்களையும் கடமைகளையும் சுட்டிநிற்கின்றன.

**எந்த ஒரு நபரும் நாட்டை விட்டு வெளியேறவும் தனது நாட்டுக்குள் திரும்பவும் உரிமையுண்டு. தனது சொந்த நாட்டைவிட்டு வெளியேறியதற்காக சட்டரீதியாக தண்டிக்கப்படமாட்டார்கள் என்ற உறுதியுடன் திரும்புவதற்கு அவர்கள் உரிமையுள்ளவர்கள்.**

மேற்கத்தைய நாடுகளில் வாழும் அகதிளுக்குள்ளேயும் அகதிகள் இருக்கின்றார்கள். நம்முடைய மக்களின் சிந்தனைகளும் வாழ்க்கை முறையும் அப்படியாகிவிட்டது

வெளிநாடுகளில் 83ம் ஆண்டுக்கு முன் போனவர்கள் ஒரு பகுதியினர். 83ம் ஆண்டுக்கு பின் சென்றவர்கள் இன்னுமொரு பகுதியினராக தங்களுக்குள் பிரிந்து வாழ்கின்ற ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையை நாங்கள் காணலாம்.

1983ம் ஆண்டுக்கு முன் போனவர்கள் நினைக்கிறார்கள் தாங்கள் எல்லோரும் படித்தவர்கள் "white collars Job" தேடிவந்தவர்கள். 83ம் ஆண்டிற்குப்பின் வந்தவர்கள் பாமரமக்கள் படிக்காதவர்கள் சாதாரண தொழில் செய்பவர்கள் நாட்டில் பிரச்சினை என்று பொய் சொல்லி இங்கே பொருளாதார வளம் தேடுவதற்காக வந்திருப்பவர்கள் என்று கருத்து வேறுபாடுகள் நிலவுகிறது.

83க்குப் பின் சென்றவர்கள் உண்மையில் கஷ்டத்தினால், நாட்டுப் பிரச்சினையினால் அங்கு சென்றவர்கள். நீங்கள் நம்பமாட்டீர்கள் இவர்களை அங்கு வைத்திருந்தால் ஆபத்து எனக் குறிப்பிட்டு அவர்களை வெளியேற்றுவதற்கு 83ம் ஆண்டுக்கு முன் சென்ற தமிழர்கள் சிலரே காரணமாயிருக்கிறார்கள். இன்னொரு விடயம் அகதிகளாகச் சென்ற மக்களை இப்பொழுது அகதிகள் என்று சொன்னால் எங்களை அடித்துக் கொன்றுவிடுவார்கள்.

ஆய்வுகளைப் பார்க்கின்ற போது எத்தனை பேர் உண்மையான காரணங்களுக்காக அகதிகளாக சென்றிருக்கிறார்கள், எல்லோரையும் அவ்வாறு வகைப்படுத்த இயலாது. ஒரு குடும்பத்தில் 5பேர் என்றால் அவர்களில் ஒருவர் லண்டனுக்கு போய் 2 வருடத்தில் மிச்சம் 4 பேரையும் லண்டனுக்கு எடுத்துவிடுகிறார். இது உண்மையில் அகதி வாழ்வா?

வெளிநாடுகளில் வாழ்வதானது, எங்களுக்கு பொருளாதார ரீதியாக அனுகூலங்களைக் கொண்டுவருகிறது, நாங்கள் கஷ்டப்படும்போது காசு வருகிறது. ஆனால், தூர நோக்கில் எங்கள் சமுதாயம் சீர்குலைந்து போவதற்கு பெரிய காரணமாய் இருககிறது. அங்கு நடக்கிற கூத்துக்கள் பற்றி நான் இங்கு சொல்ல வரவில்லை. அது உங்களுக்கும் தெரியும். 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் இங்கு வருவதற்கே விரும்புகிறார்கள். இதற்கு குளிர் மாத்திரமல்ல காரணம். உளவியல் ரீதியான பல பிரச்சினைகளால் அங்கே அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனக்கு ஒருவர் சொன்னார் "Farther இங்கிருந்தால் நான் செத்துப்போவேன் தயவு செய்து என்னை அழைத்துச் செல்லுங்கள்" என்று சொன்னார். ஏனென்றால் இவர்களுடைய- எங்களுடைய பிள்ளைகளின்- நடைமுறையைப் பார்த்தால் நாங்கள் தமிழர்கள் என்ற உணர்வே இல்லாமல் போகப்போகிறது. ஆகவே நீங்கள் தயவுசெய்து கூட்டிக்கொண்டு போங்கோ என்றார்.

இப்படியான சூழ்நிலையில் பெற்றோரை அறையில் இருக்கச் சொல்லி காலைச் சாப்பாடு, மத்தியானச் சாப்பாடு, இரவுச் சாப்பாடு எல்லாவற்றையும் வைத்துவிட்டு பிள்ளைகள் போனால் இரவு 8மணிக்குத்தான் வருவார்கள். இது பெற்றோரைப் பொறுத்தவரை பெரியதாக்கமாகும். நான் இதற்காக யாரையும் குற்றம் கூற வில்லை உண்மையை [illegible] எடுக்க வே[illegible] யாது, போக வர இடங்கள் தெரியாது இதற்கெல்லாம் முகம் கொடுக்க முடியாமல் 50-65 வயதானவர்கள் இங்கு வர விரும்புகிறார்கள்.

ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து அல்லது ஹொலண்டுக்கு போனால் பிரான்ஸ், இத்தாலிக்குப் போனால் இந்த நாடுகளில் பெரிய உள்ளூர் கலவரங்கள் எங்களுடைய ஆட்களுக்குள் நடந்தேறுவதை நீங்கள் காண்பீர்கள். ஏன் தெரியுமா? எங்களுடைய ஆட்களுக்கு நியாயமான நிதி கிடைக்கிறது. எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்களோ அவ்வளவிற்கு காசு அதிகமாகும். அரசாங்கம் குழந்தைகளை பராமரிப்பதற்குக் காசு கொடுக்கிறது. கல்வி புகட்டுவதற்குக் காசு கொடுக்கிறது. வேலை இல்லாமல் வீட்டில் இருந்தால் மாதச் சம்பளம் கொடுக்கிறது. இங்கு ஒருவருடம் உழைக்கிற காசு, அங்கு வேலை இல்லமல் சும்மா வீட்டில் இருந்தால் பெற்றுக் கொள்ள முடியும். இதனால் அகதிகள் கஸ்டப்பட்ட நிலை மாறி இவர்களுக்குள் ஒரு பொருளாதாரப் போட்டி உருவாகியுள்ளது.

நான் முன்பு குறிப்பிட்டவாறு இந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு தோன்றும் பொருளாதாரச்சுமை, அந்த நாட்டு மக்களிடமிருந்து கிளம்பும் எதிர்ப்பு இவற்றை எங்களுடைய நிலையிலிருந்து பார்ப்போமானால் எமது நாட்டுக்கு இன்னொரு நாட்டைச் சேர்ந்தவர்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து எமது செல்வத்தை விழுங்குகின்ற போது நாங்கள் சும்மாயிருக்கக்கூடிய ஆட்களா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். யதார்த் தமாக சிந்திக்கின்ற போது ஐரோப்பிய மக்கள் கருணை மிக்கவர்கள்.

இதனை நினைவில் வைத்துக் கொள்ளவும் நாட்டில் பிரச்சினை தீர்ந்து ஒரு சுமூகமான சூழ்நிலை திரும்பி வந்தாலும் கூட 90 வீதமான மக்கள் இங்கு திரும்பி வரமாட்டார்கள். என்னுடைய கருத்து அவர்கள் வரவும் கூடாது. நீங்கள் படித்தவர்கள் காரணத்தை யோசித்து ஊகித்துக் கொள்ளுங்கள்.

ஆபத்தான சூழலில் அகதிகள் என்று வெளிநாடுகளுக்குப் போய், இங்கே எங்களுடைய சுய அடையாளத்தை இழந்து விடுவோம் என்று அங்கே ஓடி, இதைவிட பல விதத்திலும் அங்கே சுயத்தை இழந்து விட்டோம். மலையளவு வயிற்றை சுமந்து எலிக்குஞ்சை பெற்றெடுத்த மாதிரி ஆகிவிட்டது.

இன்னொரு சாபக்கேடு மற்றவர்கள் வேறுவகையான சிந்தனையை கொண்டிருக்கலாம். என்னைப் பொறுத்த வரையில் மேற்கத்தைய நாடுளை நோக்கிய புலப் பெயர்வினால் எங்களுடைய தமிழர்களுக்கு பொருளாதார நலன்கள் தவிர நன்மைகளிலும் பார்க்க தீமைகள் தான் விளைந்திருக்கிறது என்று தான் கூறுவேன். ஏனென்றால் எங்களுடைய கட்டமைப்புக்கள் எல்லாம் குலைந்து போய்க் கொண்டிருக்கிறது.

பெரும்பான்மையான இளம் சந்ததி ஐரோப்பிய வாழ்வியலுடன் கூடிய வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் இனி இங்கு வந்து சமாளிக்க மாட்டார்கள். நாங்கள் கூட அனுபவத்துடன் போனபடியால் திரும்பி வரக் கூடியதாகவிருந்தது. ஏனையோருக்குக் கஷ்டம். 20,30 வருடம் அங்கிருப்பவர்கள் அல்லது உங்கள் வயதை ஒத்தவர்கள் ஒரு ஐரோப்பிய சாயல் கொண்ட வாழ்க்கை முறையைத்தான் இங்கு கொண்டுவருவார்கள். அங்கிருப்பவர்கள் பிழையானவர்கள், தவறானவர்கள் என்று நான் கூறவில்லை. அதில் நான் தெளிவாக உள்ளேன். அவர்கள் ஐரோப்பிய பாணியிலான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் வருவதால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு.

தற்போது நம் நாட்டின் மீதும் மண்ணின் மீதும் நமது பார்வையை திருப்புவோம். யாழ் குடாநாடு ஒரு திறந்த சிறைச்சாலை என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனாலும், எனது சிந்தனையில் வடக்கு கிழக்கு அதாவது தமிழர் [illegible]பூமி இன்று திறந்த அகதி [illegible]தான் இருக்கின்றது. மக்களினது வாழ்வுக் கட்டமைப்புக்கள் சீர்குலைந்து மனித துன்பங்களும் அழிவுகளும் இழப்புக்களும் பெருகிவருவது அண்மைக்காலச் சான்றுகள்.

கடந்த 20ம் திகதி உலக அகதிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. சில தகவல்கள் பத்திரிகைகளிலும் வேறு ஊடகங்கள் வாயிலாகவும் பெறக்கூடியதாயிருந்தது.

1981ம் ஆண்டிலே யாழ் மாவட்டத்தில் 8 லட்சத்து 85 ஆயிரம் மக்கள் வாழ்ந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இன்று அரை பங்கினரே வாழ்கிறார்கள். அது மட்டுமல்ல, இம் மண்ணிலே பெரும்பாலான நிலப்பரப்பு எறிகணைகள், வானூர்திகள் எனப்படும் வல்லூறுகளின் வல்லுறவுகட்கு உட்பட்டிருக்கின்றது. இவையனைத்தும் ஆறு அறிவு படைத்த மனிதனின் இயக்கத்தில் தான் முனைப்பு பெற்றிருப்பதை பார்க்கிறோம்.

எமக்கு ஒரு சிந்தனை இருக்க வேண்டும். நாங்கள் பேசுவது எங்களுக்கும் சேர்த்துத்தான். அந்த philosophy வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் ஒவ்வொருவரும் வைத்திருக்க வேண்டும். தீய விடயங்கள் பற்றி, புத்திமதிகள் பற்றி சிந்திக்கும் போது மற்றவருக்கு மாத்திரம் என்றில்லை எங்களுக்கும்தான்.

70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நம் உடன்பிறப்புக்கள் மண்ணோடு மண்ணாக, மௌனமாக சங்கமித்துள்ளார்கள், ஊனமடைந்துள்ளார்கள் சொத்துக்களையும் நிலபுலங்களையும் இழந்துள்ளார்கள், இடம் பெயர்ந்துள்ளார்கள், நாட்டை விட்டு ஓடியிருக்கின்றார்கள், இன்று உலகம் முழுவதும் அகதிகள் என்று நாமம் சூட்டப்பட்டு வாழ்கிறார்கள்.

அரை பங்குக்கு மேற்பட்ட மக்கள் தமது சொந்த வீடுகளையும், பட்டிணங்களையும், கிராமங்களையும் நிரந்தரமாய் இழக்கச் செய்யப்பட்டு நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

1983ம் ஆண்டு தொடக்கம் 15 இலட்சம் மக்கள் மனிதர்களுடைய நாசகாரச் செயல்களினால் இடம் பெயர்ந்துள்ளார்கள். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினுடைய அறிக்கைகளின்படி இவர்களில் பெரும்பாலனவர்கள் தமிழர்கள்.




இன்று உலகம் முழுவதும் உள்நாட்டுச் சண்டைகள், நாடுகளுக்கிடையிலான எல்லைப் பிரச்சினைகள் காரணமாக 3 கோடி 20 இலட்சம் பேர் அகதிகளாகியிருக்கிறார்கள். இவர்களைப் பராமரிப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்று ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய உறுப்பினர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

தம்முடைய சொந்த இடங்களை, தொழில்களை இழந்து அகதிகளாயுள்ளவர்களை எவ்வகையிலும் பராமரிக்க வேண்டியது ஒவ்வொரு அரசினுடையதும், எங்களுடையதும் தார்மீகக் கடமையும் பொறுப்புமாகும்.

ஆசிய நாடுகளிலேயே அகதிகள் விவகாரத்தில் முதன்மை வகிப்பது இலங்கை ஆகும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து 15வருடங்களாக நடைபெறும் உள்நாட்டுப் போரினால் தமிழ் மக்கள் பெரும் சதவீதத்தினர் அகதிகளாக அல்லல்படுவது இந்த நாட்டில் தொடர்ந்த சாபக்கேடாக இருக்கிறது. குறிப்பாக எங்களுடைய மண்ணினுடைய அவலமாக காண்கிறோம். இலங்கை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் பதில் ஸ்தானிகரது விஜயத்தின் போது கிடைத்த தகவல்களின்படி வட-கிழக்கிலே போர் காரணமாக சுமார் 8 இலட்சம் மக்கள் நாட்டுக்குள் அகதிகளாக இருக்கின்றார்கள். 8 இலட்சம் மக்கள் அகதி அந்தஸ்து கோரி வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளார்கள். இரண்டும் சேர்ந்து நாட்டின் 8.32 சத வீத மக்கள் அகதிகளாக உள்ளார்கள் இவர்களில் 98 சத வீதமானவர்கள் தமிழர்கள்.

இன்னுமொரு தகவலின்படி உலகில் பெருமளவு அகதிகள் காணப்படும் நாடாக இலங்கை

தொடர்ச்சி 05ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராணனை வாங்கும் பிரயாணம்

கே.மோகன்



1983ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் யாழ் குடாநாட்டு மக்கள் நாட்டின் இதர பகுதிகளோடும், கொழும்பு நகரத்தோடும், நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தனர். வியாபாரம், உத்தியோகம், கல்வி போன்ற பல்வேறு தேவைகளின் நிமித்தம் இந்தத் தொடர்புகள் வலுவடைந்திருந்தன.

1983ஆம் ஆண்டு இன வன்முறைக்குப்பின் முற்றாகச் சீர்குலைந்து போன இந்தத் தொடர்புகள் அதன் பின்னர் படிப்படியாக, யுத்தத்தின் மத்தியிலும், விருத்தியடைந்து இன்று 1983ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்த நிலையை எட்டியுள்ளது. அதுமாத்திரமல்லாமல் இன்று உலக நாடுகளிலெல்லாம் இடம்பெயர்ந்து வாழும் குடாநாட்டு மக்களின் தொகையும் தலைநகர் கொழும்புடன் யாழ் குடாநாட்டு மக்களை இறுகப்பிணைத்திருக்கிறது. இந்நிலையில் தரைமார்க்கமான போக்குவரத்துவழி மூடப்பட்டுள்ள காரணத்தினால் கடல்மார்க்கமாகவும், ஆகய மார்க்கமாகவும் மாத்திரமே போக்குவரத்துச் செய்ய வேண்டிய கட்டாயம் குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

புகையிரதங்கள், போக்குவரத்துச் சபை பஸ்கள், உற்பத்திப் பெருட்களை சந்தைப்படுத்துவதற்காக எடுத்துச் செல்லும் லொறிகள், தனியார் பஸ்கள், தத்தமது சொந்த வாகனங்கள், மூலமாக பெருந் தொகையான மக்கள் தினமும் போக்குவரத்துச் செய்யமுடிந்தது. இது தவிர அவசியமாயின் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி யாரும் பயணம் செய்யக்கூடிய நிலையும் காணப்பட்டது.

இப்போது வாரம் இரண்டு தடவை யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் City of Trinco கப்பலில் ஒருதடவையில் 450பேர் மாத்திரமே பயணம் செய்ய முடிகிறது. Lion Air தனியார், பயணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர், ஆகக் கூடுதலாக ஒரே நாளில் மூன்று தடவை இடம்பெறும் விமானப் படையினரின் Heli Tours விமானச் சேவை மூலம் 138 பேர் மட்டுமே பயணம் செய்யக் கூடியதாயுள்ளது.

தரைவழியாக தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்துச் செய்யும் வசதி வாய்ப்புக்களைக் கொண்டிருந்த மக்களுக்கு இப்போதுள்ள போக்குவரத்து வசதிகள் போதுமானதாயில்லை என்பதும் இதனால் பொதுமக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுவதும் சொல்லித் தெரிய வேண்டிய விடயமில்லை. பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகள் பற்றிய அக்கறையின்றி, பயணிகள் விமானச்சேவையை முடக்க எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குப் பின்னர் குறைந்த அளவிலாவது Heli Tours விமானச் சேவை நடைபெறுவது பொதுமக்களைப் பொறுத்தவரையில் வரப்பிரசாதம் என்றால் மிகையில்லை.

ஆழியில் துரும்பைப் போன்று அந்தரித்த நிலையில் கைகொடுத்து உதவும் வகையில் நடைபெறும் இந்த விமானச்சேவையின் நோக்கங்களை சிதைத்துவிடும் வகையில் பாதுகாப்பு காரணங்களை கூறி அமுல்படுத்தப்படும் நடைமுறைகளினால் ஏற்படுகிறது. பயணிகள் அனுபவிக்க நேர்ந்துள்ள ஆக்கினைகள், அலைச்சல்கள், கால விரயங்கள், பணம்பறிப்புக்கள் கொஞ்சமில்லை. இந்த விமானப் பயணச் சேவையானது வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ் அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள போதும் இந்த அவலங்கள் தீர்ந்தபாடாய் இல்லை என்பது பொதுவான அபிப்பிராயம். அது மாத்திரமல்ல யாழ் குடாநாட்டை பிரதிநிதித்துவப் படுத்தும், பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 9 பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலிருந்தபோதும் அவர்கள் மக்களின் இந்த அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு உருப்படியாக எதையும் செய்ய முயலவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள், தங்கள் கட்சிக்கு ஆதரவளித்தவர்களின் பயணத்தை இலகுபடுத்திக் கொடுத்து தமது வாக்கு வங்கியை உறுதிப்படுத்த நினைக்கிறார்களே தவிர குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் பொதுவானதொரு பிரச்சினையாக இதனைக் கருதவில்லை.

வெளிநாடொன்றில் இலங்கை நாணயப் பெறுமதியில் 30 ஆயிரம் ரூபாவை கொடுக்கத் தயாராயுள்ள ஒருவர் பாதுகாப்பு அனுமதியையும், பயணச்சீட்டையும் எதுவித சிரமமுமில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் என வெளிநாடுகளிலிருந்து வரும் நம்மவர்கள் மூலம் அறிய முடிகிறது. யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்கள் பற்றி தொலைக்காட்சி கமராவின் முன் கண்ணீர் வடிக்கும் அரசியல், வியாபார தந்திரங்களை அறிந்த யாழ் மாவட்ட எம்.பி ஒருவரின் உறவினர் ஒருவரே வெளிநாடொன்றில் பணத்தைப் பெற்றுக்கொண்டு இந்த வியாபாரத்தையும் நடாத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேர்வழியில் பாதுகாப்பு அனுமதியையும், பயணச்சீட்டினையும் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டில் இருந்து வரும் ஒருவர் இதனைவிடவும் அதிகமான பணத்தை, கொழும்பில் தங்கும் விடுதிக்காகவும், உணவுக்காகவும், இதர தேவைகளுக்காகவும் செலவிட நேர்வதுடன், நேரத்தையும் வீணடித்து, அல்லை தொல்லைகளுக்கும் உள்ளாக வேண்டி ஏற்படுவதால் அனேகமானவர்கள் இந்தக் குறுக்கு வழியையே நாடுகிறார்கள்.

பயணச்சீட்டு பெறுவதற்கான கியூவில் இடம்பிடிப்பதற்கும், கப்பல் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களில் இடம் பிடிப்பதற்கும் கூட காசு கொடுத்து அலுவல் பார்க்கின்ற நிலை எவ்வாறு உருவானது அதற்கான காரணங்கள் என்ன என்பதனை ஆராய்ந்தால் அளவுக்கதிகமான, அனாவசியமான கெடுபிடிகளும், கட்டுப்பாடுகளுமே இலஞ்சமும், ஊழலும் பெருகுவதற்குப் பிரதான காரணமாக உள்ளதை அவதானிக்கலாம்.

யாழ் குடாநாட்டில் வசிக்கும் ஒருவர் தனது பகுதியில் உள்ள பாதுகாப்புப்படையினரின் சிவில் அலுவலகத்தின் ஊடாக அனுமதி பெறுவதிலிருந்து, வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் (RRAN) அலுவலகத்தில் பயணச்சீட்டு பெறுவதற்கான அங்கீகாரம் பெறல், பின்னர் யாழ் சிவில் நிர்வாக காரியாலயத்தில் விமானப்படையினரிடமிருந்து பயணச் சீட்டுக்களை பெறுவது வரை கணிசமானளவு காலத்தை விரயம் செய்ய வேண்டியுள்ளது.

இந்த 3 இடங்களிலும் உத்தரவுகளை வழங்கும் அதிகாரம் படைத்தவர்கள் வேறுபடுவதால் ஒரு இடத்தில் வழங்கப்படும் உத்தரவு மற்றொரு இடத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல்போய்விடுகிறது. இதனால் இந்த மூன்று இடங்களிலும் எழும் சிக்கல்கள், காணப்படும் குறைபாடுகள் பயணிகளையே அழுத்திக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக குறித்த ஒரு திகதியில் பயணம் செய்வதற்கு பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெற்று பயணச் சீட்டை கொள்வனவு செய்யச் செல்லும் ஒருவர் அந்த திகதியில் பயணச் சீட்டை பெற முடியாது. திரும்பவும் றான் அலுவலகத்தில் புல நாள்களைச் செலவிட்டு அதிகாலையில் கியூவில் இடம்பிடித்து பயணச்சீட்டை பெறுவதற்கான ரசீதை பெற்றுக்கொள்ள வேண்டும். பாதுகாப்புப்படையினரிடம் பயணம் செய்வதற்கு அனுமதிபெற்ற திகதியில் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருவது RRAN அலுவலகத்தின் பொறுப்பாக கருதப்படுவதில்லை. பயணிகள் குறிப்பிடும் மற்றொரு திகதியில் பயணம் செய்வதற்குக்கூட வாய்ப்புக் கிடைக்காது. றான் அலுவலக அதிகாரிகள் விமானத்தில் இடமிருப்பதாக குறிப்பிடும் ஒரு திகதியில் பயணம் செய்வதற்கு ரசீது வழங்கப்படும்.

தொடர்ச்சி 07ம் பக்கம்

# உலகப்பரப்பில் அகதி .......

04ம் பக்கத் தொடர்ச்சி

மாறிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது. சிறிய நாடான இலங்கையிலிருந்து 8 இலட்சத்து 17 ஆயிரம் பேர் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் கோரியுள்ளார்கள்.

யாழ்குடாநாட்டில் இருப்பவர்கள் கிட்டத்தட்ட 5 1/2 இலட்சம்,. 8 இலட்சத்து 17 ஆயிரம் பேர் அகதிகளாக வெளியே இருக்கிறார்களென்றால் தமிழர்கள் எங்கே? தமிழீழம் எங்கே? மண்ணில்லாத மக்களும், மக்களில்லாத மண்ணும் எங்கே போய் முடியப் போகிறது.

8 இலட்சத்து 17ஆயிரம் பேர் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் கோரியுள்ளார்கள் 8 இலட்சம் பேர் உள் நாட்டில் அகதிகளாக வாழுகின்றார்கள் கனடாவிலே 4 இலட்சம் பேர், ஐரோப்பிய நாடுகளிலே 2 1/2 இலட்சம், இந்தியாவில் 67ஆயிரம், அமெரிக்காவில் 40ஆயிரம், அவுஸ்திரேலியாவில் 30 ஆயிரம் வேறு நாடுகளில் 80ஆயிரம் பேரும் தஞ்சமடைந்திருப்பதாக புள்ளி விபரங்களின்படி தெரியவருகிறது.

அகதி வாழ்வு ஏற்படுத்துகின்ற தாக்கங்களையும் அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பதையும் உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

அகதி வாழ்வு எங்களுடைய மண்ணில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் முதன்மையானவையாக உளவியல் ரீதியான தாக்கங்கள் அமைவதைப் பார்க்கின்றோம். எதிர்காலம் பற்றிய பயம், நெருக்கீடு, உறவுகளை பிரிதல், தாழ்வு நிலை, வாழ்க்கைத் துணையின்மை-யாழ்ப்பாணத்தில் ஓர் கணிப்பின்படி 7 பெண்ணுக்கு ஒரு ஆண் என்ற விகிதத்திலிருப்பதாக புள்ளி விபரம் உள்ளது- ஏராளமான பிள்ளைகள் அநாதையாக்கப்படுகிறார்கள், ஊனமடைகின்றார்கள் இது போன்ற இன்னும் பல பாதிப்புக்களை நாங்கள் காண்கிறோம்.

இவற்றில் மிகப் பயங்கரமான, பரிதாபமான எங்கள் இனத்தின் கட்டமைப்புக்களை குலைக்கின்ற சில பாரதூரமான விளைவுகளை நாங்கள் கவனிக்க வேண்டும். மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்துகிறேன். இவ்வாறான பின்னணியில் சீரழிவுகள் இங்கேயும் வெளிநாட்டிலும் குழுக்களாக இடம் பெயர்ந்து வாழுகின்ற பொழுது ஏற்படுகின்றன.

கலாச்சார சீரழிவுகள், பண்பாட்டுச் சிதைவுகள், சமூக கட்டமைப்பு உடைவுகள், கல்வி வளர்ச்சி குன்றல், ஒழுக்கச் சீர்கேடுகள், பட்டினிச் சாவுகள், தீராத நோய்கள், குற்றச் செயல்கள், ஆன்மீகத் தரக் குறைவு, இறையுணர்வு அற்ற நிலை, மனித மாண்பு பேணப்படாமை, பகிர்வற்ற வாழ்க்கை, சுயலாபம் கருதும் தொழில் - *நாங்கள் சுயநலமுள்ளவர்களாகியிருக்கிறோம். நாங்கள் கூட சுயலாபம் தரக்கூடிய தொழில்களைத்தான் புரிகின்றோம். இந்தச் சூழல் இதனை உருவாகியுள்ளது.*- விழுமியங்கள் அழிதல், முதியோர் இளையோர் உறவுச்சிக்கல். - *ஒரு மனிதனுக்கு அன்பு இல்லா விட்டால் அவன் செத்ததுக்கு சமன் என்று உளவியலாளர்கள் சொல்கிறார்கள் எத்தகைய மனிதனுக்கும் அன்பை அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கியம் இருக்கக்கூடாது.*

குற்றம் குறைகளை சரி என்று நியாயப் படுத்துதல் *இது நாங்கள் விடும் பெரிய பிழை.* பலதார திருமணப் பழக்கங்கள், *யாழ்ப்பாணத்தில் ஒரு திருமணம், இடம்பெயர்ந்து போய் கிளிநொச்சியில் ஒருதிருமணம், 3வது திருமணம் மடுக் கோவிலில், 4வது திருமணம் வவுனியாவில், 5வது திருமணம் திருகோண மலையில், பின்பு முதலாவது திருமணம் யாழ்ப்பாணத்தில்.* சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்ற சீரழிவுகளுக்கு அடிப்படை தத்துவ ரீதியான காரணம் இந்தப் போரும் இந்தப் போரின் தாக்கத்தினால் மக்கள் இடம்பெயர்ந்து ஒன்றாகச் சிக்குப்பட்டு வாழும் நிலையும் தான்.

## நமது கடமை என்ன

❑ பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடியுமானவரை உதவிக்கரம் நீட்ட வேண்டும், எல்லா ரீதியிலும். நம்மிடம் இருப்பவற்றை மற்றவர்களுடன் பகிர்தல் வேண்டும், பகிர்வதற்கு பழகிக் கொள்ள வேண்டும். எம்மிடம் ஒன்றும் இல்லை என்று சொல்லலாம் இருப்பதைக் கொண்டு, அன்பைக் கூட நாங்கள் பகிரலாம், ஆறுதலைக் கொடுக்கலாம், நான் உன்னுடன் இருக்கிறேன் என்பதை சொல்லலாம். அவர்களின் தனிமையிலே தோழமையைக் காட்டுதல், உளவியல் ரீதியில் சொல்லப்போனால் (when you appreciate a person his weakness disappear) ஒரு மனிதனுடைய நல்ல பக்கங்களை ஆரோக்கியமான பக்கங்களை தட்டிக்கொடுக்கின்ற போது அவனுள் இருக்கின்ற ஆரோக்கியமற்ற நிலைமைகள் இயல்பாகவே மறைந்துவிடுகின்றன. நல்ல பக்கங்களை பாராட்டும் போது ஒரு மனிதனுடைய குறைகள் இயல்பாகவே இல்லாமல் போய்விடும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

❑ மனித மாண்பில் அக்கறை கொண்டவர்களாக அவர்களை பேண வேண்டும்

❑ அழிவுகள் கொண்டுவரும் விளைவுகளைப்பற்றி அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

❑ மனிதனுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். *நம்பிக்கைதான் மனிதனை இயக்குகின்ற ஓர் சக்தி. ஒரு மனிதனுக்கு Hope இல்லை என்றால் அவர் Hopeless ஆக போய்விடுவார்.*

❑ பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக, சுபீட்சமான வாழ்க்கைக்காக உரக்கப் பேச வேண்டும்.

பல்கலைக் கழகத்தில் இருக்கும் நீங்கள் குழுவாக அகதி முகாம்களுக்குச் செல்ல வேண்டும். ஆய்வு மேற்கொள்வதற்காக கொப்பி பென்சிலுடன் போகக்கூடாது. என்னைப் போல நீயும் மாண்புள்ள ஒரு மனிதன் என்பதை காட்ட வேண்டும். அகதி முகாம்களில் இருப்பவர்கள் எல்லோரும் [illegible] வர்களில்லை எங்களை விட மேலான நிலையில், பொருளாதார சுபீட்சத்துடன், வாழ்க்கையில் உச்சகட்ட இன்பங்களை அனுபவித்தவர்களும் இன்று ஒன்றுமில்லாமல் இருக்கின்றார்கள். அகதிகள் என்றால் தரக்குறைவானவர்கள் என்ற எங்களுடைய பொதுவான அபிப்பிராயம் தவறானது.

வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் நம் மக்கள் சிதறுண்டு அகதி வாழ்க்கை வாழ்வதென்பது தமிழினத்தின் தன்னல பொருளாதார சுபீட்சத்திற்கு மாத்திரம் ஒரு நன்மையே தவிர தமிழ் மக்களின் எதிர்கால நலத்திற்கு, அடையாளத்திற்கு ஆபத்தாகவே முடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இத்தகைய மனித துன்பத்தையும், அவலத்தையும் தந்து மனித வாழ்க்கையின் மாண்பை சீர் குலைக்கின்ற அனைத்துப் போர் முனைப்புக்களையும் உடனடியாக நிறுத்துவதற்கு நாம் எம்மாலியன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

மனிதத்தின் புனிதத்தை தத்துவமாக ஏற்று வாழும் எந்தத் தனிமனிதனும் மனித அழிவுக்கு காரணமாக இருக்கின்ற போரை விரும்ப மாட்டான்.

அண்மையில் French Philosopher ஒருவர் சொன்னதை இங்கே குறிப்பிடலாம் "ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விதத்தில் இந்த உலகத்தினுடைய வளர்ச்சிக்காக சிறிய சிறிய பங்களிப்பை செய்கிறான் என்ற நினைப்புள்ளவர்கள் அந்த மனிதனுக்கெதிராக கரத்தை தூக்கமாட்டார்கள்."

ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்ற அளவில், குழந்தையாக இருக்கலாம் நோயாளியாக இருக்கலாம் - ஒரு குழந்தை கூட பெற்றோரைப் பார்த்துச் சிரிக்கும் போது பெற்றோர் எவ்வளவு ஊக்கம் பெறுகிறார்கள்- ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விதத்தில் சிறு அளவிலாவது, உலகத்தினுடைய நன்மைக்காக, சக்திக்கேற்றவாறு பங்களிக்கிறான் என்பதை தெரிந்து அறிந்து கொண்டிருப்பவர்கள் அந்த மனிதனுக்கெதிராக ஒரு போதும் தமது கரத்தினை உயர்த்தமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1983ம் கட்டுநாயக்கா அழிவும்

**1983** யூலை 23 இனப்படுகொலை நடந்த அதே தினத்தில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 17 வருடங்களின் பின்னர் பாரிய அழிவு நாசவேலைகள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நாசவேலையை 1983 இனப் படுகொலைக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக யாரும் கருதுவார்களானால் அதைவிட பாமரத்தனமான கருத்து வேறொன்றும் இருக்கமுடியாது. இதில் இறும்பூதெய்துவதற்கோ, பூரிப்படைவதற்கோ எதுவுமில்லை என்பதே உண்மை.

தமிழ் மக்களின் விடுதலை என்பதை விட அதன் பெயரால் பேரழிவை தொடர்வதென்பதே இங்கு புலிகளின் நிலைப்பாடாக உள்ளது.



**அழிவையும் அனர்த்தத்தையும் வழிபடும், அதில் பெருமகிழ்வு கொள்ளும் போக்கு பாசிச சக்திகளால் மாத்திரமே இயலுமானது. அந்த எண்ணக்கரு தமிழ் சமூகத்தில் ஒரு பெரிய நோயாகப் படர்ந்துள்ளது.**

**சிங்களப் பேரினவாத சக்திகளும் அவ்வாறுதான் சிந்திக்கின்றன. 1983 இன வன்முறையைத் தொடர்ந்து வெடித்த பாரிய யுத்தத்தை வடக்கு கிழக்கினுள் மட்டுப்படுத்தி நாட்டின் இறைமையின் பெயரால் சர்வ நாசம் விளைவித்த பேரினவாத அரசியல் இன்றுவரை வடக்கு-கிழக்கு மக்கள் நாளாந்தம் செத்துக் கொண்டும், அகதி முகாம்களை நோக்கிப் பயணித்துக் கொண்டும், கெடுபிடிகளை அனுபவித்துக் கொண்டும் இருப்பதை எப்போதாவது சிந்தித்துள்ளதா என்றால் இல்லை.**

**தென்னிலங்கையில் ஏற்படும் ஒவ்வொரு சம்பவமும் அதன் குரூரத்தனத்தினூடாக வெளிப்படுத்தும் மன அதிர்வை வடக்கு கிழக்கில் நடைபெறும் சம்பவங்கள் தெற்கில் ஏற்படுத்துவதில்லை.**

தற்போதைய நிலவரங்களிலாவது



இவற்றைப்பற்றி ஆழமாகச் சிந்திப்பார்கள் என்றால் பல வியத்தகு சாதனைகளை இந்த நாட்டில் நிகழ்த்த முடியும்.

பத்திரிகைகளும், மதபீடங்களும், ஏனைய தொடர்பு சாதனங்களும் இனவாத விசத்தைக் கக்குகின்றன.

வடக்கு- கிழக்கில் அழிவை வழிபடும், அழிவுக்குள்ளேயே மக்களை வைத்திருக்க விரும்பும், மாற்றுக் கருத்துக்களைக் கொண்டோரை அழித்தொழிக்கும் ஜனநாயக விரோதப் போக்கை பராமரிக்கும் போக்கே காணப்படுகிறது.

மக்கள் மத்தியில் நம்பிக்கைகள் உருவாவதை, ஆக்கத்தைப் பற்றி சிந்திப்பதை இச் சக்திகள் தீவிரமாக எதிர்க்கின்றன.

கட்டுநாயக்கா பயங்கரங்கள் 1977 ஜே.ஆர் பதவியேற்ற கையோடு உருவாக்கிய தீவிர இன முரண்பாட்டுச் சிக்கலின் வரலாற்று ரீதியான தொடர் விளைவின் ஒரு கட்டமே என்பதை யாரும் இலகுவில் மறுத்துவிட முடியாது.

**திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய கையோடு இலங்கையில் பலம் பொருந்திய தொழிலாள வர்க்க இயக்கத்தை பிளவுபடுத்துவது, சிவில் யுத்தத்தை உருவாக்குவது, நாட்டின் இளந்தலைமுறையினரை இராணுவமயமாக்குவது, வடக்கு கிழக்கில் அழிவுகளை மேற்கொள்வது, தெற்கில் திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலான அபிவிருத்தியை மேற்கொள்வது (சிங்கப்பூரை உருவாக்குவது என்ற கனவு) ஜே.ஆர். தொடக்கி வைத்த விபரீதம் "பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய" கதையாகத்தான் போய் விட்டது.**

எந்த இடத்தில் வெளிநாட்டு முதலீடுகள் ஆரம்பித்தனவோ அந்த இடமே இன்று பயங்கரவாத பேரனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

எண்ணெய்க்குதம், மத்திய வங்கி போன்ற நாட்டின் ஜீவநாடியான பொருளாதார மையங்கள் மீது தாக்குதல்கள் நடந்து அந்தக் கோரங்களின் நினைவுகள் நெஞ்சை விட்டகலமுன் கட்டுநாயக்காவில் பாரிய தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு பெரும் சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன.

**21ம் நூற்றாண்டில் மிகத் தீவிரமான இலகுவான சர்வதேச தொடர்புகளும் முக்கியமானவை.**

**கட்டுநாயக்கா மிக முக்கியமான வர்த்தக மையமும்கூட.**

**இதனால் ஏற்பட்ட அழிவுகள் நிவர்த்திக்கபட பல ஆண்டுகள் பிடிக்கலாம்.**

**இலங்கையின் மிகப் பெரிய உல்லாசப் பயணத்துறை அதலபாதாளத்திற்கு செல்லலாம்.**

**வெளிநாட்டு முதலீடுகள் கைவிட்டுச் செல்லப்படலாம்.**

**ஒரு பாதுகாப்பற்ற நாடு என்ற பெயர் உலகளாவிய அளவில் ஏற்படலாம்.**

**ஹிகாலி, ருவண்ட ஆகிய நாடுகளில் ஏற்பட்ட நிலைமைகள் ஏற்படலாம்.**

**இந்த நாட்டின் மூளை உழைப்பாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறலாம்.**

**சிறு வர்த்தகர்கள் பாதிக்கப்படலாம்.**

**பல்வேறு தொடர்புபட்ட பிரச்சினைகள் உருவாகலாம். மொத்தத்தில் மிகப்பாரிய பொருளாதார யுத்தச் சுமை இந்த நாட்டின் சகல மக்களையுமே பெரும் பிணியாக நிரந்தரமாகவே அழுத்தும் நிலை உருவாகலாம்.**

**இந்த நிலைமைகளிலிருந்து விடுபட இலங்கை மேற்கொள்ளக்கூடிய அவசர அவசிய நடவடிக்கை என்ன?**






முதலும் முக்கியமானதும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முனைவதே. முன்னுரிமை இதற்கு கொடுக்கப்படாமல், பின்னரும் இலங்கையின் அரசியற் தலைவர்கள் இசைந்து கொடுக்காமல் தட்டிக் கழித்துக் கொண்டே போனால் பேரனர்த்தங்களும், அழிவுகளும் அதிகரித்துச் செல்வதிலிருந்து விடுபடமுடியாத நிலையையே இலங்கை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

இலங்கையில் நடைபெற்ற இந்த பயங்கரமான சம்பவம் தொடர்பாக சர்வதேச சமூகமும் பெரிதாக அலட்டிக் கொள்ளாத பாரதூரமான நிலையொன்று உருவாகியிருப்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

விடாக்கண்டன், கொடாக்கண்டன் நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நிலைமைகளை பின்தள்ளி யுத்த முனைப்பு மாத்திரம் காணப்படுவது சர்வதேச சமூக மட்டத்தில் ஒரு வித சலிப்பையும், எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

**நாம் உலகம் சொல்வதை கவனித்து முன்னேற முயற்சிக்காமல் நடந்து கொள்வோமானால் எங்களை விட்டு விட்டு எல்லாமே சென்றுவிடும்.**

**நாம் பழைய உலகத்திற்குரிய டைனோசர்களாக மாறிவிடும் சாத்தியமும் உண்டு.**

தற்போதைய நிலவரங்கள் இன முரண்பாட்டு அழிவுகளுடன் இளந் தொழிலாளர் பட்டாளம் ஒன்று சடுதியாக வேலை இழக்கும் அபாயமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வன்முறைகளும் பயங்கரவாதங்களும் எமது நாட்டு வேலை வாய்ப்புக்களை குறைத்து விடும் சாத்தியமுண்டு.

இந்த நாட்டின் பெரும்பான்மையான அமைதி விரும்பும் தமிழ், சிங்கள, முஸ்லீம் மலையக மக்களின் விருப்பம் சுயமரியாதையுடன் கூடிய சமாதானமே. அதனை ஏற்படுத்துவதற்கு எத்தகைய காரியங்கள் ஆற்றப்பட வேண்டுமோ அதனை செயற்படுத்துவதே இன்று எம்முன் உள்ள முக்கிய பணி.

குறுகிய எண்ணங்கொண்ட இனவாத சக்திகளை முறியடித்து இந்த மகத்தான காரியம் ஆற்றப்பட வேண்டும். அப்போதுதான் இந்து சமுத்திரத்தின் முத்தென முன்னொரு காலத்தில் அழைக்கப்பட்ட இந்த நாடு தப்பிப் பிழைக்க முடியும்.

# ஒரு மானிடன்

**தான்** பிறந்து வளர்ந்த சமூகத்தின் மீதும், மண்ணின் மீதும் தீராத பற்றுக் கொண்டிருந்த மனிதர் குமார் மூர்த்தி. முகத்தில் எப்போதும் இனம்புரியாத சோக இழையொன்று ஓடிக்கொண்டிருக்கும். அது நிச்சயமாக எமது சமூகத்தின் துயர் பற்றியதே என்பதை அவருடன் பேசும் போது நான் அறிந்து கொண்டேன்.

1998 வாக்கில் தனது பாதிக்கப்பட்ட உடல்நிலை தொடர்பாக சோதனை செய்வதற்காக தோழர் தேசிகனுடன் கோயம்புத்தூர் சென்று வந்தது எனக்கு ஞாபகம். அவரை சென்னையில் இரண்டு மூன்று தடவை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அந்த ஒரு சில நாட்களிலேயே அவர் ஒரு அற்புதமான மனிதர் என்று உணர்ந்து கொண்டேன்.

தான் புலம் பெயர்ந்து வாழும் கனடாவிலிருந்து நாட்டுக்குத் திரும்பிவர வேண்டும். எமது சமூகத்தில் சராசரி மனிதர்களில் ஒருவராக வாழ வேண்டும். என்ற பேரேக்கம் அவரிடமிருந்தது.

புத்தகங்கள் மீது அவர் பிரியங் கொண்டவர்.

அவர் மரணமடைகையில் அவருடைய உடம்பில் எண்ணற்ற குழாய்களும் கருவிகளும் பொருத்தப்பட்ட நிலையில் இரத்த சுத்திகரிப்பு நடந்து கொண்டிருந்ததாகவும் தன் உடல் சிக்கல் பற்றி எதுவும் பிதஸ்தாபிக்காமல் அலட்டிக் கொள்ளாமலும் துடிப்போடும், ஆர்வத்தோடும் செயல்முனைப்போடும் காரியமாற்றும் குமார் மூர்த்தியை அந்நிலையில் பார்க்கும்போது



மனக்கலக்கம் ஏற்பட்டதாக அவரது நெருங்கிய நண்பர்கள் தெரிவித்துள்ளனர்

உண்மையில் அவருடைய மரணச் செய்தியை தற்செயலாக நோர்வேயிலிருந்து வெளிவரும் சக்தி சஞ்சிகையின் வலைத் தளத்தில் பார்க்க நேர்ந்தது. அது பார்த்த முகமாக இருக்கிறதே என்று பெயரைப் பார்த்தவுடன் விபரம் தெரிந்தது. அவருடைய மரணம் சம்பந்தமாக நேரடிச் செய்தி எதுவும் கிடைக்கவில்லையே என்று வருத்தமாக இருந்தது.

வெற்று ஆரவாரங்களும் போலித்தனங்களும் நிறைந்த ஈழத்தமிழ் உலகில் குமார் மூர்த்தி சற்று வித்தியாசம் என்பதை அவருடன் பழகக் கிடைத்த சில மணி நேரங்களிலேயே புரிந்து கொண்டேன்.

குமார் மூர்த்தி அவர்கள் எழுதிய "ஹனிபாவும் இரண்டு எருதுகளும்" என்ற சிறுகதையை வாசித்துள்ளேன், குறிப்பிடத் தக்கது. அவர் எழுதிய "முகம் தேடும் மனிதன்" ஒரு மிகச் சிறந்த கதை என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

அவர் நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்டவர். குமாரசாமி கோமதி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த குமார் மூர்த்தி 1987ல் கனடாவுக்கு புலம்பெயர்ந்தார். இவர் மனைவி தயானந்தி. இவர்களுக்கு மூன்று குழந்தைகள் சிந்துஜா, தனுஜா, சகன்.

ஜனநாயக உணர்வும் மற்றவர்களின் பங்களிப்பை மதிக்கும் பக்குவமும் மனிதநேயமும் இன்று எமது சமூகத்தில் அருகிப் போயுள்ளன.

சிறந்த மனிதர்களுக்கு பாரதியைப் போல் குறுகிய காலம்தான் போலும். மரணிக்கும் போது மூர்த்திக்கு வயது 45. அவருக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.


ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டம்

## யாழ் பல்கலைக் கழக உபவேந்தர்

### பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் உரையிலிருந்து.



தற்போது இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் எந்தவொரு மாவட்டத்திலும் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையினராக இல்லை. எனவே முஸ்லீம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டத்தை உருவாக்கும் நோக்கில் முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம் மக்கள் அதிகளவில் வாழும் பிரதேசமான அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைப் பிரதேசத்தை தனியொரு மாவட்டமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருகிறார்கள்.

இந் நேரத்தில் கடந்த 12.06.2001 இல் யாழ் பல்கலைகழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் இவ்விடயம் தொடர்பாக ஒரு கருத்துரையை யாழ் பல்கழகத்தில் நிகழ்த்தியுள்ளார். அவரின் பார்வையில்.

1960ம் ஆண்டு மார்ச் மாதமும் ஜூலை மாதமும் இரு தேர்தல்கள் நடைபெற்றன. இத் தேர்தல்களின் பின் 1961ம் ஆண்டு தமிழரசுக் கட்சியினர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதன் காரணமாக மட்டகளப்பு செயலகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தது. அந் நேரத்தில் அம்பாறை, கல்லோயா அபிவிருத்தித் திட்டப்பணிகள் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனவே இப் பணிகளை நிர்வாகம் செய்வதற்காக அம்பாறையில் தற்காலிகமாக ஒரு செயலகம் அமைக்கப் பட்டது.

அப்போது சிறிமா பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்தபடியினால் அம்பாறை மாவட்டத்தை உருவாக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு உத்தியோகபூர்வமாக 1961ம் ஆண்டு ஏப்ரலில் அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. 1959ம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணயத்தின்படி கல்முனை, நிந்தவூர், பொத்துவில், அம்பாறை ஆகிய 4 தேர்தல்தொகுதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தினுள் உள்ளடக்கப் பட்டிருந்தது.

அம்பாறை மாவட்டம் உருவாக்கத்தின் போது அரசாங்கம் முஸ்லீம் தமிழ் மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பைக் கவனத்தில் கொள்ளாது அம்பாறை கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அம்பாறை மாவட்டச் செயற்பாடுகளை நிர்ணயித்தது.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழ்ந்த போதும் அம்பாறை மாவட்டக் கச்சேரியை முஸ்லீம் தமிழ்ப் பகுதிகளில் அமைக்காது சிங்கள பகுதியிலேயே அதாவது அம்பாறையிலேயே அமைக்கப்பட்டது.

இதனால் முஸ்லீம் தமிழ் மக்கள் தமது நிர்வாகக் கடமைகளைப் புரிவதற்கு சிங்களப் பகுதிகளுடாகவே அம்பாறைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

1976ம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணயத்தின்படி பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக உருவாக்கப்பட்டது. தமிழர் ஒருவரும், முஸ்லீம் ஒருவருமாக பிரதிநிதித்துவம் அமையும் வகையில் இரட்டை அங்கத்தவர் தொகுதி அமைந்தது.

1977ம் ஆண்டு தேர்தலின் போது அம்பாறை மாவட்டம் பொத்துவில் தேர்தல் தொகுதியிலிருந்து, முதன் முதலாக அதாவது சுதந்திரம் பெற்ற பின் திரு. கணகரட்னம் என்பவர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பட்டார். அவர் மரணமடைந்ததும் அவரின் சகோதரி பிரதிநிதியானார்.

1989ம்ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ரெலோவைச் சேர்ந்த திவ்வியநாதன் அம்பாறை மாவட்டத்தில் இருந்து தனியொரு பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதற்குக் காரணம் அப்போது மக்கள் கட்சி சார்பாக அல்லாது (தனிப்பட்ட விருப்பில்லாது) தமிழர்கள் எல்லோரும் அவருக்கு வாக்களித்தபடியால் அவர் பிரதிநிதித்துவம் பெற முடிந்தது.

1994ல் நடைபெற்ற தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பல முனைகளில் போட்டியிட்டபடியால் கூடுதலாக மாவை சேனாதிராசா அவர்கள் 25,000 வாக்குகள் பெற்று நான்காவது இடத்திற்கு வந்தார். தமிழ்ப் பிரதிநிதித்துவம் அப்போது கிடைக்கவில்லை.

2000ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழர் ஒருவர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதற்குக் காரணம் முன்னர் ஆறாக இருந்த பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஏழாக அதிகரிக்கப்பட்டமையே ஆகும். பிரதிநிதிகள் எண்ணிக்கை ஆறாக இருந்திருந்தால் அவருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் இருக்கும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் இருந்து பிரிந்து கல்முனை மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லீம் காங்கிரஸினர் முன் வைத்துள்ளனர். முன்னரும் இக் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது. தற்போது தமிழர்கள் இக் கோரிக்கை தொடர்பாக சில எண்ணக் கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 21 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமிழ் முஸ்லீம் பகுதி, சிங்களப் பகுதி எனக் கலப்பில்லாமல் தனித்தனியாகக் காணப்படுகின்றது. அம்பாறை மாவட்ட மொத்த நிலப்பரப்பு 4318 சதுர கிலோ மீற்றர் ஆகும். இதில் 927 சதுர கிலோ மீற்றர் தமிழ் முஸ்லீம் பகுதியாகவும், 3415 சதுர கிலோ மீற்றர் சிங்களப் பகுதியாகவும் உள்ளது.

தற்போது கல்முனை மாவட்டம் எவ்வாறு அமையும் என நோக்கும் போது ஒன்று பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை, சிங்கள லபுக்கன அல்லாத பாணப்பத்து தேர்தல் தொகுதிகள் உள்ளடங்கிய மாவட்டமா? அல்லது தமிழ், முஸ்லீம் மக்கள் வாழும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை ஒன்றிணைத்த மாவட்டமா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. தேர்தல் தொகுதிகளை மையமாகக் கொண்டு கல்முனை மாவட்டத்தை அமைக்கும் போது பொத்துவில் தொகுதியினுள் இரண்டு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரதேசப் பிரிவுகள் அதற்குள் வரும். லவுக்கன உதவி அரசாங்க அதிபர் பிரிவும் ஒரு பகுதியில் அடங்கும். அரசாங்கம் தேர்தல் தொகுதி அடிப்படையிலேயே மாவட்டம் உருவாக்க முனையும் சந்தாப்பமும் உள்ளது.

1981ம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின்படி அம்பாறை மாவட்டத்தில் 37வீதம் சிங்களவரும், 20வீதம் இலங்கைத் தமிழரும், 41வீதம் முஸ்லீம்களும், இருந்ததாக புள்ளி விபரம் கூறுகின்றது. அதாவது 61வீதம் பெரும்பான்மையாக தமிழ் பேசும் மக்கள் உள்ள போதும் அங்கு நிர்வாகம் சிங்களத்திலேயே நடைபெற்று வருகின்றது. அத்துடன் 4318 சதுரகிலோ மீற்றர் பரப்பளவில் 927 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு தவிர மிகுதியில் சிங்கள உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்களே கடமையாற்றுகிறார்கள். அங்கு தமிழர்கள் இல்லை என்றே கூறலாம்.

மகாஓயா, படியத்தலாவ பகுதியில் 1961ம் ஆண்டு மட்டக்களப்பு பிரிக்கப் பட்ட போது மகாஓயாவில் உள்ள புல்லுமலை என்னும் கிராமப்பகுதி மட்டும் மட்டக்களப்புடன் இணைக்கப் பட்டது. ஆனால், உடனடியாக அது மட்டக்களப்பு கச்சேரியால் நிர்வகிக்க முடியாதபடியால் மகாஓயா, படியத்தலாவ உதவி அரசாங்க பிரிவுகளை மகியங்கனையுடன் இணைத்து நிர்வகிக்கப்பட்டது. குருநாகல் மாவட்டத்துடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டது.

ஆனால், தேர்தல்களின் போது மாகாண எல்லைகளை தளர்த்த முடியாத காரணத்தினால் அது மட்டக்களப்பு மாகாணத்தினுள் சேர்க்கப்பட்டது. பின் மிகவும் பஞ்சிப்பட்டு அதை மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைத்தார்கள் மாவட்ட அபிவிருத்திச் சபை வேலைக்காக பிரித்தார்கள். இது தற்போது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் சீ வலயமாக உள்ளது. இங்கு ஒரு லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். மகியங்கனையையும், அம்பாறையின் இப் பகுதியையும் இணைத்து ஒரு மாவட்டம் உருவாக்குவதாக சந்திரிக்கா பண்டாரநாயக்கா அவர்கள் கூறியுள்ளார்கள். மகியங்கனை, மகாவலி அபிவிருத்தித் திட்டம் "சீ" யின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டது.

அதனாலேயே 1994ம் ஆண்டு தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலும் ஐ.தே.க தோல்வியை தழுவியபோது மகியங்கனைத் தொகுதியில் அமோக வெற்றியீட்டியதில் இருந்து காலஞ்சென்ற காமினி திசாநாயக்கா மகியங்கனைத் தொகுதியில் எவ்வளவைச் செய்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

கரையோரப் பகுதியை நோக்குவோமானால் அங்கு தமிழ் முஸ்லீம் பகுதியில் 12 சிறிய உதவி அரசாங்க பிரிவுகள் உண்டு அவையாவன பொத்துவில், தம்பிலுவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, முஸ்லிம் கராவல்பத்து, தமிழ் கராவல்பத்து, நாவிதன்வெளி, மாவினைகுடி, சம்மாந்துறை, இறக்காமம் என்பனவாகும்.

தமிழ் மக்களுக்கு ஆறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தரப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகிறது. அதாவது பொத்துவிலில் கோமாரி உதவி அரசாங்க அதிபர் பிரிவும், திருக்கோவில் ஆலையடி வேம்பு, காரைத்தீவு பகுதியில் ஒரு கிராம சேவகர் பிரிவில் முஸ்லீம் குடியேற்றம் உண்டு. மூன்று கிராம அலுவலர் கொண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவும் இங்கே உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. கராவல்பத்து, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை போன்ற கிராம சேவகர் பிரிவுகளை இணைத்து ஒரு பிரதேச செயலகமாக்கி தாருங்கள் என்பதும் தமிழர்களின் கோரிக்கையாக உள்ளது. அது இன்னும் நிறைவேறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பிராணனை வாங்கும் பயணம்............

_05ம் பக்கம் தொடர்ச்சி

இந்த ரசீதை பெற்றுக்கொண்டு பயணிகள் ஓய்ந்திருக்கமுடியாது. பயணச்சீட்டு வழங்கும் விமானப்படையினரின் அலுவலகத்திற்கு ஓட வேண்டும். மீண்டும் பல நாட்கள் கியூவில் நின்று உரிய கரும பீடத்திற்கு செல்லும் வாய்ப்புக்காக தவமிருக்க வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தாலும் RRAN அலுவலகத்தில் உறுதியளிக்கப்பட்ட பயணத் திகதியில் பயணச்சீட்டுக் கிடைக்காது. அந்தத் திகதியில் பயணச்சீட்டு வழங்க வேண்டும் என்ற கட்டாயம் விமானப் படையினருக்குக் கிடையாது. எனவே, மீண்டும் விமானப்படையினர் விமானத்தில் இடமிருப்பதாக தெரிவிக்கும் வேறொரு திகதிக்குப் பயணிகள் பயணத்தை ஒத்திப்போட வேண்டியி ருக்கிறது.

மிகக் குறைந்தளவிலான பயணிகளே பயணம் செய்யும் விமானச்சேவையில் பயணச்சீட்டை பெறுவதற்கு, பயணத் திகதியை உறுதிப்படுத்துவதற்கு இவ்வளவு காலவிரயமும், அலைக்கழிவுகளும் அவசியம்தானா? இந்த வீண் கால விரயத்தையும், அலைக்கழிவையும் தவிர்ப்பதற்காக எந்த ஒரு பயணியும் குறுக்கு வழியை நாடி இலஞ்சம் கொடுத்து காரியமாற்றும் நிலைக்கு தள்ளப்படுவதும், இதனால் மேலும் சீர்கேடுகள் தோன்றுவதும் தடுக்க முடியாததாகியுள்ளது.

பயணச்சீட்டினை பெற்றுவிட்ட பின்பும் பயணிகள் சௌகரியமாகப் பயணம் செய்ய முடியாது. ஒரு மணி நேரப் பயணத்திற்காக மேலும் ஆறு மணி நேரத்தை அவர்கள் செலவிட வேண்டும். பயணத் திகதியில் அதிகாலையிலேயே யாழ்ப்பாணத்தில் சிங்கள மகாவித்தியாலயம் அமைந்திருந்த இடத்தில் ஆஜராகும் பயணிகளும் அவர்களது பயணப் பொதிகளும் சோதனையிடப்பட்டு பயணச் சீட்டுக்கள் பரிசீலிக்கப்பட்டு பஸ்வண்டியில் ஏற்றப்படுகிறார்கள் இராணுவீரர் ஒருவரதும், பொலிசார் ஒருவரதும் காவலுடன் புறப்படும் இந்த பஸ்வண்டி வெடிபொருட்கள் பொருத்தப்பட்டுள்ளதாவென புன்னாலைக்கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள காவலரண் ஒன்றில் நிறுத்தி வைத்துச் சோதனையிடப் பட்ட பின்னரே, விமானநிலையம் அமைந்துள்ள பலாலிப்பகுதிக்குள் செல்ல வேண்டும்.

பலாலியில் மீண்டும் பயணச் சீட்டுக்கள் பரிசீலிக்கப்பட்டு பயணிகளும், பயணப்பொதிகளும் மீண்டும் சோதனையிடப்படுகின்றது இந்த நடை முறைகளால் பயணிகளுக்கு ஏற்படும் மன உளைச்சல் பற்றியோ, பயணி களின் நேரம் வீணடிக்கப் படுவதை பற்றியோ யாரும் கவலை கொள்வதாக இல்லை.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத் திற்குப் பயணம் செய்யும் குடாநாட்டு மக்களின் நிலை இதை விடவும் பரிதாபகரமானது.

தமது பெற்றோரை பார்த்துச் செல்வதற்காகப் 12 வருடங்களுக்குப் பின் ஜேர்மனியிலிருந்து வந்த ஒரு குடும்பத்தினர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கு ஒரு மாதகாலத்தை கொழும்பில் விரயம் செய்யவேண்டியிருந்தது. இதன் பின்னர் பயணச்சீட்டினைப் பெறுவதற்காக ஒருவாரம் அலைய வேண்டியிருந்தது. பம்பலப்பிட்டியில் உள்ள அலுவலகத்தில் பயணச்சீட்டு வழங்கப்பட்டது.

பயணத்திகதியன்று இரத்மலானை விமானநிலையத்திற்கு சென்றபோது கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் காரணமாக விமான சேவை நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டு திருப்பி அனுப்பப் பட்டார்கள். ஆயினும் விமானசேவை நடைபெறுவதாக விடுக்கப்பட்ட வானொலி அறிவிப்பைக் கேட்டு மறுபடியும் விமான நிலையத்திற்குச் சென்ற வேளையில் விமானசேவை இடம் பெற்ற போதும் பம்பலப்பிட்டி அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட பட்டியலில் பெயர் விபரங்கள் இல்லாமையால் பயணம் செய்ய முடியாது என்று தெரிவித்து மீண்டும் திருப்பி அனுப்பப் பட்டார்கள்.

மறுதினம் பம்பலப்பிட்டி அலுவலகத்திற்கு சென்ற அந்தக் குடும்பத்தினரிடம் அடுத்தநாள் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டு இல்லை என்று தெரிவித்து அதற்கடுத்த நாள் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டு வழங்கப்பட்டது.

குறித்த நாளில் விமான நிலையத்திற்குச் சென்ற இந்தக் குடும்பத்தினரின் பெயர் விபரங்கள் பம்பலப்பிட்டியிலுள்ள பயணச்சீட்டு வழங்கும் அலுவலகத்திலிருந்து தமக்கு அனுப்பப்படவில்லை என்று கூறி 2வது தடவையும் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இதன் பின்னர் மீண்டும் பம்பலப்பிட்டி விமானப் பயணச்சீட்டு வழங்கும் அலுவலகத்திற்குச் சென்று 3வது தடவையாக பயணத் திகதியை உறுதிப்படுத்திய பின்னரே அவர்கள் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது.

ஆக இத்தனை அலுவலகங்கள், அதிகாரிகள், ஊழியர்கள் பணிபுரிந்தும் நாளொன்றுக்கு 138 பேர் மாத்திரமே பயணம் செய்கின்ற விமானச் சேவை ஏன் இத்தனை கடினமாக்கப் பட்டுள்ளது என்பதற்கு விடைகாண்பது அவசியம்.

உலகின் எந்த விமானச் சேவையிலும் 3500 ரூபாவை கட்டணமாகச் செலுத்திப் பயணம் செய்யும் பயணி ஒருவருக்குக் கிடைக்கும் வசதிகளும், உரிமைகளும் எமது பயணிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. மெதுமெதுவாக அதுவே நியதி என்றாகி விட்டது

விமானப் பயணத்தில் தான் இத்தனை அவலங்கள் என்றால் வட பிராந்திய போக்குவரத்துச் சபையும் விமானப்பயணிகளை விடுவதாயில்லை. விமானப்பயணிகள் விடயத்தில் தாங்கள் வைத்தது தான் சட்டம் என்ற மனப்போக்கில் செயற்படுவதாகவே எண்ணவேண்டியுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பயணி ஒருவர் பலாலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் சென்ற பயணப்பொதி ஒன்றுக்கு 20 ரூபாவை கட்டணமாக அறவிட்ட போக்குவரத்துச்சபை அதே பயணியிடம் அதே பயணப்பொதியை யாழ்ப்பாணத்திலிருந்து பலாலிக்கு எடுத்துச் செல்வதற்கு 10 ரூபாவே கட்டணமாக அறவிட்டுள்ளது.

தமிழ் அலுவல்கள் அமைச்சு ஒன்று இருந்தபோதும் முழுக்க முழுக்க தமிழ் மக்களே பயணம் செய்யும் விமானச்சேவையுடன் தொடர்புடைய அலுவலகங்களில் தமிழில் கருமமாற்ற முடியாத நிலையே நீடிக்கிறது. தமது பிரச்சினைகளை தமிழில் பேசித் தீர்வுகாண முடியாது, பணம் பறிக்கும் தரகர்களை நாடிச்செல்ல வேண்டிய கட்டாயம் பயணிகளுக்கு இந்த இடத்திலேயே ஆரம்பமாகிறது. இரத்மலானை விமானநிலையத்திற்குச் செல்லும் பயணிகள் தமது பிரச்சினைகளைத் தெரிவித்து நிவிர்த்தி செய்து கொள்வதற்கு அங்கு கருமபீடமும் கிடையாது, அதிகாரமுள்ள ஒருவரை இலகுவாகச் சந்திக்கவும் முடியாது. விளம்பரப் பலகைகள் கூடக் கிடையாது. அங்கு வீதியில் காவலுக்கு நிற்கின்ற விமானப்படை வீரரிடமே தமது பிரச்சினைகளை கூறவேண்டிய, விபரமறிந்து கொள்ளவேண்டிய நிலையே காணப் படுகிறது.

மக்களை சிறுமைப்படுத்துகின்ற, அவமதிக்கின்ற இந்த நடை முறைகள் அனைத்தும் எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் புரிந்து கொண்டு இவற்றுக்குத் தீர்வுகாணும் வழிகளை கண்டு செயலாற்றுவது அவசர அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் சிவாஜி கணேசன் - தமிழியலில் நடிப்பிலக்கணத்தின் காவியம்

சிவாஜி என்ற கலைஞனைப் பற்றி பலவிதமான வியாக்கியானங்கள் பல்வேறு பத்திரிகைகள், பிரசுரங்களில் வெளிவந்துள்ளன.

தனது இழப்பினூடு கடந்த 50 ஆண்டுகள் தமிழ் மனங்களில் சிவாஜி கணேசன் உருவாக்கிய படிமங்கள் முக்கியமானவை. இந்திய சுதந்திர போராட்ட வீரர்களையும் மாபெரும் இந்தியத் தலைவர்களையும் சிவாஜி ஊடாகவே பெரும்பாலான தமிழர்கள் தரிசித்துள்ளனர்.

தமிழச் சினிமாவில் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றோரின் அடுக்குத் தமிழ் வசனங்களை அழகாகப் பேசி, அவ்வாறானதொரு தமிழுக்கு பரந்துபட்ட மக்கள் மத்தியில் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதில் சிவாஜியின் பங்கு பிரதானமானதாகும். பாடல்களால் நிறைக்கப்பட்டிருந்த தமிழ்ச் சினிமாவை வசனங்கள் நிறைந்ததாக ஆக்குவதில் சிவாஜியின் வல்லமையே தலைமையானதாகும்.

கடவுள்கள், வரலாற்று நாயகர்கள் மற்றும் இலக்கிய நாயகர்களின் வடிவங்கள் பற்றி தமிழர்களின் மனங்களில் உள்ள படிமங்களும், அழகு, ஒழுக்கம், காதல், வீரம், வெற்றி, தியாகம், திறமை, ரசனை மற்றும் தனிமனித, குடும்ப மற்றும் சமூக உறவுகளுக்கான நியாயங்கள் போன்றவை தொடர்பான எண்ணக்கருக்களைத் தமிழர் மத்தியில் பதிப்பதிலும் தமிழ் சினிமாக்களின் பாத்திரம் மிக அதிகமாகும்.

தமிழர்களின் மனங்களில் தமிழ் சினிமாக்களினால் பதிக்கப்பட்டிருப்பவற்றை முற்றாக அழித்து விட்டுப் பார்த்தால் அங்கு மிகவும் மங்கிய பிம்பங்களையே காணமுடியும்.

இவ்வாறான சினிமாவின் பாத்திரத்தில் சிவாஜி கணேசனினதும், எம்.ஜி.ஆரினதும் பங்கு மிகப்பெரிதாகும். அதிலும் ஒழுக்கம், வீரம் என்பவை தொடர்பான கதாநாயகத் தனங்களை நீக்கிவிட்டுப் பார்த்தால் எஞ்சியவற்றில் சிவாஜியின் பங்கே பெரிதாகும். சைவக்கடவுள் சிவபெருமான் எப்படியிருப்பார் என்றால் அவர் சிவாஜி கணேசன் மாதிரியிருப்பார் என்பதே பலரிடமும்



உள்ள எண்ணக்கரு.

மன்னர்கள் எப்படியிருந்தார்கள் என்பதைத் தமிழர்களுக்கு சாம்ராட் அசோகன், கர்ணன், ராஜராஜசோழன் மூலமாக சிவாஜிகணேசன் பதித்துள்ள அளவுக்கு வேறு யாராலும் முடியவில்லை. திருநாவுக்கரசர், திருமங்கையாழ்வார், அரிச்சந்திரன், அம்பிகாபதி, காளிதாசன் என இலக்கியப் பாத்திரங்கள் பலவற்றுக்கும், கிரேக்கப் பேரறிஞன் சோக்கிரட்டீஸ், சேக்ஸ்பியரின் மார்க் அன்ரனி போன்றோர் பற்றியும் தமிழர்கள் மனதில் உருவங்களைப் பதித்திருப்பவர் அவரே.

இவ்வாறாக சரியோ பிழையோ யதார்த்தத்தில் தமிழர்களின் மனங்களில் புதைந்து கிடக்கும் கருத்துக்கள், வடிவங்கள், விழுமியங்கள், பெறுமதிகள் ஆகியவற்றை கட்டமைப்பதில் சிவாஜி என்ற மாபெரும் கலைஞன் வகித்துள்ள ஆளுமையின் பங்கு மிகக் கணிசமானது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நடிப்பியலின் இலக்கணம் சிவாஜியே என்றால் மிகையாகாது. 1960க்குப் பின்னர் தமிழ்த் திரையுலகுக்குள் பிரவேசித்தவர்கள் மட்டுமல்ல, உள்ளூர் நாடகங்கள், கூத்துக்களில் நடிக்க முன்வந்தவர்களிலெல்லாம் சிவாஜியே இலட்சிய புருஷனாக அமைந்தார். இன்றைக்கும் நடிப்புக் கலை என்ற விடயத்தில் அந்த நிலையை யாரும் மாற்றியமைத்துவிடவில்லை.



இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும், தேசபக்தியை ஏற்படுத்தும் காத்திரமான பாத்திரங்களாக சிவாஜி கணேசனே தமிழர்கள் மத்தியில் உலா வந்தார். தென்னிந்தியாவிலேயே அத்தகைய பாத்திரங்களை ஏற்று நடித்த நடிகர்களில் சிவாஜி முதன்மையானவர் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஹிந்தியில் ராஜ்கபூர் அவர்கள் ஆற்றிய பாத்திரத்தை தமிழில் ஆற்றியவர் சிவாஜியே.

தமிழகத்தில் திராவிட இயக்கமும் அதிலிருந்து தோன்றிய கட்சிகளும் கொடிகட்டி பிரிவினை உணர்ச்சிகளையும், இந்திய தேசிய விரோத உணர்வுகளையும் கட்டி வளர்த்துக் கொண்டிருந்த போது அவற்றைக் கட்டுப்படுத்தியதில் சிவாஜியின் பங்கு மறுக்கமுடியாத ஒன்றாகும். இரத்தக் கண்ணீர், கப்பலோட்டிய தமிழன், வீர பாண்டிய கட்டபொம்மன் போன்ற திரைப்படங்கள் குறிப்பிடத் தக்கவை. இக்குறிப்பிட்ட படங்கள் மட்டுமல்லாது, சிவாஜி கணேசனின் பெரும்பாலான படங்கள் இந்திய தேசியத் தலைவர்களைப் பெருமைப்படுத்தும், இந்திய தேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் காட்சியம்சங்களையும் கருத்தம்சங்களையும் உள்ளடக்கியவையாகவே இருந்தன.

இன்றைக்கு திராவிட இயக்க கட்சிகளின் அரசியற் தலைவர்கள் இந்திய தேசியத்தில் கலந்து கொள்ள போட்டி போடுகிறார்கள். ஆனால், இவர்களும் இவர்களின் தலைவர்களும் அன்றைக்கு இந்திய தேசத் தலைவர்களை பார்ப்பனியத்தின் பெயரால் கொச்சைப்படுத்தியதுடன், இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் வலியுறுத்திய தமிழ்த் தலைவர்களையும், தமிழ்க் கலைஞர்களையும் தமிழ்த் துரோகிகள் எனப் பட்டம் சூட்டினார்கள்.

1947ம் ஆண்டு இந்தியா பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற போது அந்த நாளை துக்கதினமாகக் கொண்டாடியவர்கள். பின்னர் இந்தியாவின் 50வது சுதந்திர நினைவு நாளை இந்தியாவில் எங்குமில்லாத அளவுக்கு பெரிய அளவில் கொண்டாடினார்கள். இவர்கள் பாரதியைக் கூட பார்ப்பனனாகப் பிறந்ததற்காக அவர் நல்ல தமிழ்க் கவிஞன் அல்ல என்றார்கள். பாரதியின் கவித்துவத்தையும், அவனின் தமிழுணர்வையும், இந்திய தேசப் பற்றையும் அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு ஐம்பது வருடங்கள் ஆகியது. இவர்களை நம்புபவர்கள் குறைந்த பட்சம் ஐம்பது வருடங்களாவது அறிவிலிகளாக இருக்க வேண்டியேற்படுகிறது.

திராவிட இயக்கத்தவர்களின் இன உணர்ச்சி அரசியற் பிரச்சாரங்கள் மத்தியில் சிவாஜி போன்றவர்களின் கலையுலக வாழ்க்கை இந்திய தேசிய ஒருமைப்பாட்டை, இந்திய மக்களின் ஒற்றுமையை நிலைநிறுத்துவதில் ஒரு சவாலாக இருந்தது என்றே கூறவேண்டும்.

இளம் வயதிலேயே நடிகராக தனது வாழ்க்கையைத் தொடங்கிய சின்னையா கணேசன் பெரியாரின் திராவிட இயக்கத்தினூடாகவே பிரகாசமான ஒரு நடிகராக சிவாஜி கணேசனாக வெளிப்பட்டார். திராவிடக் கட்சிக்காரர்களின் மூலமாகவே திரைப்படத் துறையில் மின்னத் தொடங்கினார் என்பதில் சந்தேகமில்லை. திராவிட இயக்கத்தின் தீவிர கருத்துக்களைத் தாங்கிய பராசக்தி இன்றைக்கும் சிறந்ததொரு திரைக்காவியமாக உள்ளது.

பராசக்தி, மனோகரா, நவராத்திரி, தெய்வமகன், பாசமலர், வீரபாண்டிய கட்டப்பொம்மன், கப்பலோட்டிய தமிழன், அம்பிகாபதி, ராஜபார்ட் ரங்கதுரை, தில்லானா மோகனம்பாள், சிவந்த மண், வசந்தமாளிகை, கௌரவம், தங்கப்பதக்கம் போன்ற முத்திரை பதித்த எண்ணிறந்த படங்களின் ஊடாக இலங்கைத் தமிழ் மனங்களின் அடியாழத்திலும் சிவாஜி கணேசன் பதிந்துள்ளார்.

தமிழகத்தில் அவ்வளவு தூரம் வெற்றிகரமாக ஓடாத திரைப்படங்கள் பல இலங்கையில் வெற்றிப்படங்களாக ஓடியமையும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் சில மாதங்கள் கூட ஓடமுடியாமற் போன வசந்த மாளிகை யாழ் வெலிங்டன் திரையரங்கில் 200 நாட்களுக்கு மேல் ஓடியமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

தனக்கு அடுத்தடுத்த தலைமுறைகளில் பிரகாசித்த நடிகர்கள் அத்தனை பேருடனும் அவர் நடித்து விட்டார் என்பது மட்டுமல்ல, கமலஹாசன் தொடக்கம் இன்றைய இளம் நடிகர்களான விஜய், பிரபுதேவா ஆகியோருடனும் அவர் நடித்துவிட்டார்.

நாடகத்தில் தொடங்கி இன்றைய தொலைக்காட்சித் தொடர்கள் வரை ஒரு வரலாறாக வாழ்ந்தே அவர் மறைந்தார். அரசியலில் அவர் இந்திய தேசிய ஓட்டத்திலேயே அதிக அக்கறை கொண்டிருந்தார். அதேவேளை தமிழன் என்ற உணர்வு அரசியலிலிருந்தும் அவர் அதிக தூரம் விலகாமல் ஒரு சமநிலையை பேணினார். பாரதியின் கவிதைகளிற் தொனித்த சமநிலையை சிவாஜி கணேசன் நடிப்புத் துறையில் பிரதிபலித்துள்ளார் எனலாம்.

தனது கலையிலும், சினிமாத் தொழிலிலும், அரசியல் ஈடுபாட்டிலும் ஒரு சமநிலையை பேணி வந்த அவர் எதிலும் தீவிரமானவராகவோ, பேராசை கொண்டவராகவோ, தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட வேண்டுமென்ற அங்கலாய்ப்புக் கொண்டவராகவோ இருக்கவில்லை. பெரியார், காமராஜர், ராஜாஜி, அண்ணாத்துரை போன்ற தமிழகத்தின் முன்னணித் தலைவர்களின் அரவணைப்பை அவர் எப்போதும் தவறவிட்டதில்லை.

அவருக்கு அரசியல் செல்வாக்கு இருக்கவில்லை என்பது தவறான கூற்றாகும். தமிழகத்தின் முக்கிய பிரமுகர்கள் அணியில் அவர் எப்போதும் இருந்து வந்திருக்கிறார். கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக அவர் நேரடி அரசியலில் ஈடுபடாவிட்டாலும் காங்கிரஸ்காரர்கள், இரு பகுதி திராவிடக் கட்சிக்காரர்கள், கம்யூனிஸ்ட் இயக்கத்தவர்கள் என எல்லோருடனும் முரண்பாடற்ற நட்புறவுகளைப் பேணிவந்தார். ஜெயலலிதாவுடன் சம்பந்தி உறவை ஏற்படுத்திக் கொண்டார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அனைத்துக் கலைநிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு எல்லோரது பாராட்டுக்களுக்கும் உட்பட்டவராக இருந்தார். திரையுலகில் எல்லோரும் அவரை தங்கள் கலையுலகின் பீஷ்மராகவே மதித்தனர். திரையுலகில் எம்.ஜி.ஆரைத் தவிர வேறு யாருடனும் போட்டிபோட வேண்டிய அவசியம் அவருக்கிருக்கவில்லை. எம்.ஜி.ஆர் உடனும் அப்போட்டி எந்தக் கட்டத்திலும் எல்லை கடந்து பகைமையாகி விடவில்லை. எம்.ஜி.ஆரின் ஆட்சிக் காலத்திலும் அவரால் அவர் மதிக்கப்பட்டார்.

அவரின் இறுதிக் கால 20 ஆண்டுகளும் அவருக்கு பாராட்டுதல்கள் நிறைந்த ஆண்டுகளாகவே இருந்தன. முதல் மரியாதைக்குரிய மூத்த கலைஞன் என்ற தன்தராதரத்தை அவர் தளரவிடாது பேணிக்கொண்டார்.

இப்போதுள்ள தொலைக்காட்சிகள் சிவாஜியின் மறைவையடுத்து அடுத்தடுத்து அவர் நடித்த திரைப்படங்களின் தொகுப்பை சிறப்பாக போட்டுக் காட்டியதால் தான் அவர் சிறப்பு உணரப்பட்டது என்றில்லை.

சிவாஜியின் நடிப்புலக ஆற்றல் பற்றி எல்லா மட்டங்களிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. தீவிர எம்.ஜி.ஆர் ரசிகர்கள் கூட சிவாஜி ஒரு மாபெரும் நடிகர் என்பதை எப்போதும் நிராகரித்ததில்லை.

அவர் அரசியலில் முதலமைச்சராகாவிட்டாலும் தமிழகத் திரையுலகில் தலைமைக் கலைஞனாக பல தசாப்தங்கள் ஆட்சி புரிந்தார் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.

சிறீ-பெருமா

தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெற்ற மரணவீடு போன்ற நிகழ்ச்சி 50 ஆண்டுகாலம் தமிழ் சமூகத்தின் மனங்களை ஆக்கிரமித்திருந்த ஒரு கலைஞன் தொடர்பான விடயமேயாகும். அதில் இந்திய தேசத்துக்கேயுரிய அதிலும் தமிழகத்துக்கேயுரிய உணர்ச்சிவசப்படும் பாரம்பரிய பண்புகளும் உள்ளன.

1948ல் மகாத்மா காந்தி இறந்த போதும், ஜவகர்லால் நேரு இறந்த போதும், அண்ணா அவர்கள் இறந்த போதும் பல பத்து லட்சங்களைத் தாண்டி மக்கள் பங்கு பற்றினார்கள். காமராஜர், ராஜாஜி, பெரியார், எம்.ஜி.ஆர் மரணத்தின் போதும் மக்கள் உணர்ச்சிகள் ததும்பிய நிலையில்தான் பங்குபற்றினார்கள். அவற்றைப் போன்றதுதான் சிவாஜி கணேசனின் இறுதி ஊர்வலமும். இங்கு தனிமைப்படுத்திப்பார்ப்பது தவறு.

இது தனது மன உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் தடையின்றி வெளிப்படுத்தும் தன்மையும் உரிமையும் கொண்ட ஒரு சமூகத்தின் கலாச்சார பாரம்பரியத்தின் வெளிப்பாடு. படுகொலைகளைப் பாராட்டிக் கொண்டு பிணங்களினூடாக நாளாந்தம் நடைப்பிணங்களாய் நடமாடிவரும் எங்களில் பலருக்கு இந்திய தேசத்தின் குறிப்பாக தமிழகத்தின் இயல்பான பண்புகளைப் புரிந்து கொள்வது சிரமமேயாகும். இந்தத் திண்டாடலின் காரணமாகத்தான் இலங்கைத் தமிழ் அறிஞர்கள் சிலர் சிவாஜி கணேசனின் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களின், கலைஞர்களின் உணர்வுகளை, உணர்ச்சிகளை சரியாகப் புரிந்து கொள்ள முடியாதவாகளாக ஆகிவிடுகிறார்கள்.

சிவாஜி கணேசன் மறைந்ததன் பின்னர்தான் தமிழுலகில் உணரப்பட்டார் என்றில்லை. கலையுலகோடு உணர்வுபூர்வமாக ஒன்றியிராதவர்கள் இப்போது அது பற்றி அவ்வாறாகப் பேசுவது எழுதுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழ்ச் சமூகத்தின் மனங்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ஒரு மாபெரும் கலைஞன் இறந்து விட்டார் என்னும் போது மக்கள் மயப்பட்ட ஒரு பேரேக்கம் வெளிப்படுவது இயல்பே. சகல மகாபுருஷர்களின் மறைவின் போதும் இவ்வாறே சமூக அதிர்வலைகள் வெளிப்படுகின்றன.

சிவாஜி கணேசன் அவர்கள் வாழும்போது இந்திய அரசாங்கம் "பாரத ரத்னா"விருதை அவருக்கு வழங்காதது வருத்தத்துக்கு உரியதே. அவருக்கு அந்தத் தகுதி அதனை பெற்ற சிலரைவிட எப்போதோ கிடைத்துவிட்டது என்பதில் சந்தேகமில்லை.

அவரை உலகம் அறியாமற் போனதும், அவர் உலக கலைத் தரம் வாய்ந்த வகையில் நடிக்காமற் போனதும் அவரின் திறமையில் இருந்த குறைபாடல்ல. அது தமிழுலகின் குறைபாடென்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக்கிரட்டீஸ் பதில்கள்

எஸ். திரிபுரன் - திருகோணமலை.

**சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக ஒவ்வொரு சிங்களக் கட்சியும் தாம் சார்ந்தவர்களின் நலன்களிலிருந்து நிலைப்பாட்டை எடுத்துள்ளன. வடக்கு—கிழக்கு தமிழ்க் கட்சிகள் யாருடைய நலன்களிலிருந்து தமது நிலைப்பாட்டை எடுத்துள்ளன ?.**

இங்கு நீங்கள் தமிழ் கட்சிகள் என்று கூறுவது த.வி.கூட்டணி, ரெலோ, த. காங்கிரஸ் என்பவற்றை என்பது வெளிப்படை. இந்த தமிழ் கட்சிகளும் சிங்கள கட்சிகளைப் போலவே. அதிலொன்றும் வேறுபாடு இல்லை. இவை புலிகளின் நலனைப் பிரதிபலிக்கின்றன. புலிகள் ஐ.தே.க வை பதவிக்குக் கொண்டு வந்தால் தனது நலன்களுக்கு நல்லதென கருதுவதால் இந்தக் கட்சிகளும் ஐ.தே.க வின் நலன்களுக்காகச் செயல்படுகின்றன. ஐ.தே.க-புலிகள் இந்தத் தமிழ் கட்சிகள் மூன்றும் இணைக்கப்பட்ட முக்கோண வடிவிலேயே இவர்களின் அரசியல் உள்ளது.

கே. ராமச்சந்திரன் - தலவாக்கொல்லை.

**சர்வஜன வாக்கெடுப்பால் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படுகிறது என்று கூறப்படுவது பற்றி?.**

இவ்வாக்கெடுப்பால் அல்ல இவ் வாக்கெடுப்பு வெற்றியடையும் பட்சத்தில் அதன் மூலம் உருவாகும் அரசியல்யாப்பு பற்றியதே அவ் விவாதம். அரசாங்கம் தொகுதி முறை, விகிதாசார முறை ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்த வகையில் ஜேர்மனியில் உள்ள தேர்தல் முறையை ஒத்ததாக இருக்குமென கூறுகிறது. இம் முறையால் இப்போது இருப்பவர்களை விட இருவர் குறைவதற்கான சாத்தியங்கள் உள்ளன. இதனாலேயே இ.தொ.கா அவற்றை குறையாமல் பார்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் பற்றி பேசுகிறது. அரசாங்கமும் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் குறையாமல் அரசியல் யாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என மீண்டும் மீண்டும் கூறுகிறது.

ஆர். நாகராசா - கொட்டாஞ்சேனை.

**கட்டுநாயக்கா விமானநிலையத் தாக்குதலின் பின் நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல், பொருளாதார சூழ்நிலை எப்படி இருக்கும்?**

அரசியல் நிலையில் பெரும் தாக்கமில்லை. ஆனால் ஏற்கனவே பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தில் கட்டுநாயக்காவில் ஏற்பட்டுள்ள அழிவுகள் அந்நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தும். உடனடியாக அது உணரப்படா விட்டாலும் நீண்டகால ரீதியில் பெரும் பாதிப்புக்கள் வெளிப்படும். இதற்கு மரபுரீதியான மாத்திரைகளால் மருத்துவம் செய்ய முடியாது. அரசாங்கமும் அதன் பொருளாதார நிபுணர்களும் இப்போதே உரிய பொருளாதார மாற்று சத்திர சிகிச்சைகளை பொதுமக்களின் வெறுப்புக்கு உள்ளாகாமல் சாதிப்பார்களானால் எதிர்வரக்கூடிய நெருக்கடிகளை மேவிவிடுவது சாத்தியமே. ஆனால் வெளிநாட்டு மூலதனம், வெளிநாட்டுக் கடன் ஆகிய இரண்டையும் தவிர வேறெந்தப் பொருளாதாரத் திட்டமும் இல்லையாயின் நெருக்கடிகள் தவிர்க்க முடியாதவையாகும்.



எம். சௌந்தர நாயகி - யாழ்ப்பாணம்.

**சில தமிழ்க் கட்சிகள் ஐ.தே.க.வின் பின்னால் அணிதிரண்டிருப்பது எதனைக் காட்டுகிறது?**

இந்தத் தமிழ் கட்சிகள் இப்போதுள்ள அரசாங்கத்தின் மீது கொண்டிருக்கும் தனிப்பட்ட ஆத்திரங்களையும் அவர்களின் குளறுபடியான அரசியலையும் காட்டுகிறது.

கே. சுந்தரலிங்கம் - மட்டக்களப்பு.

**பத்திரிகையாளர் மனோரஞ்சனுக்கு விடுக்கப்பட்ட இனவாத அடிப்படையிலான கொலை மிரட்டல் பற்றி தமிழ்ப் பத்திரிகைகள் மௌனம் சாதிக்கின்றனவே ?.**

இதிலொன்றும் ஆச்சரியமில்லை. புலிகளின் பத்திரிகையாளர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டால் தான் அவை குரல் எழுப்பும் நிமலராஜனுக்காக தொடர்ந்தும் மனித உரிமைக் குரலெழுப்பும் தமிழ் நாளேடுகள் 32 வருடங்களுக்கு மேல் எழுத்தாளனாக இருந்த மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவராகிய செழியன் பேரின்பநாயகம் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லையே. இலகுவான வியாபாரத்துக்காகவே எழுத்துத் தொழில் செய்யும் இந்த நாளேடுகளிடம் வேறெதனை எதிர்பார்க்க முடியும்.

ஜே. சிம்மியோன் - தலைமன்னார்.

**சிவாஜியின் மறைவு தமிழ் கலை உலகில் ஈடுசெய்யமுடியாத இழப்பு என்பதை நிராகரிக்க முடியுமா ?.**

சிவாஜி தமிழ்க் கலை உலகில் சாதிக்கக்கூடிய அத்தனையையும் சாதித்துவிட்டார் என்றுதான் கூற வேண்டும். தமிழ் கலையை உலக தரத்திற்கு கொண்டு செல்ல சிவாஜியினால் முடியவில்லை. அதேபோல சிவாஜியை உலக தரத்துக்கு கொண்டுசெல்ல தமிழ்க் கலையாலும் முடியவில்லை.

எஸ். மனோன்மணி - வவுனியா.

**கட்டுநாயக்காவின் அனர்த்தங்கள் பாரியளவாக இருந்தபோதும் எமது நகரங்களில் கிரிக்கெட் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறதே?.**

அதுதான் மனித வாழ்க்கையின் இயல்பு. ஒருவர் இறந்து விட்டார் என்பதற்காக இரத்த உறவுக்காரர்களுக்கெல்லாம் உடன்கட்டை ஏறும் நிலை ஏற்பட்டால் மிருகங்கள் மட்டும்தான் உலகை ஆளும். 6000 கோடி அழிந்த போதிலும் ஆறு மணித்தியாலத்தில் அதனை மக்கள் சுதாகரித்துக் கொண்டமை எதையும் தாங்கும் நிலைக்கு இலங்கை மக்கள் வயப்பட்டு விட்டார்கள் என்றே காட்டுகிறது.

டி. ராஜசிங்கம் - வெள்ளவத்தை.

**சர்வஜன வாக்கெடுப்பால் ஜே.வி.பி யின் நிலைப்பாடு புரியாத புதிராக இருக்கிறதே?**

ஜே.வி.பி யின் நிலைப்பாடு எப்போது யாருக்கு புரியக்கூடியதாக இருந்தது. பாராளுமன்ற சவுக்கை தங்கள் கையில் வைத்திருக்க ஜே.வி.பி முனைகிறது என்பது தெளிவு. சவுக்குக்குச் சொந்தக்காரன் ஜே.வி.பி ஆனாலும் குதிரையோட்டி சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்காரனாகவோ, ஐ.தே.க. காரானாகவோ தானே இருக்கப் போகிறான்.

எஸ். அன்னலெட்சுமி. - வவுனியா.

**வவுனியாவில் உள்ள பூந்தோட்ட அகதி முகாமில் சவப்பெட்டி வாங்கக் கொடுத்த பணத்தில் மதுபானம் அருந்திவிட்டு ஏற்கனவே புதைக்கப்பட்ட ஒருவரின் சவப்பெட்டியை கொண்டு வந்த சம்பவம் நடந்துள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது பற்றி?**

பாரம்பரியங்கள், மரபுகள், சமூகக் கட்டுப்பாடுகள் என வாழ்ந்த இலங்கை தமிழ்ச் சமூகம் எந்தளவு தூரம் சீரழிவுக்கு உள்ளாகிப் போய்விட்டது என்பதனையே இந்தச் சம்பவம் காட்டுகிறது. இந்தச் சம்பவத்தை இன்றைய தமிழ் சமூகத்தின் குறியீடாக நாம் கொள்ளலாம் வெவ்வேறு மட்டங்களிலும் இந்தத் தன்மைதான் கோலோச்சுகிறது.

ஆர். மனோகரன் - யாழ்ப்பாணம்.

**கொக்கா கோலா முக்கோண கிரிக்கெட் தொடரில் இலங்கை வெற்றி வாகை சூடியுள்ளது பற்றி உங்கள் அபிப்பிராயம்?**

பங்குபற்றிய மூன்று நாடுகளிலும் இலங்கையே அந்த வெற்றி வாய்ப்புக்குரிய தகுதியைக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. இலங்கைக் குழு தனது ஆரம்ப விளையாட்டுக்களிலேயே இறுதித் தேர்வில் போட்டியிடுவதற்கான தகுதியை உறுதிப்படுத்திக் கொண்டது. இறுதியில் தனது வெற்றியை திறமையான முறையில் ஆடி நிலைநாட்டிக் கொண்டது.

கே. முத்துலிங்கம் - மட்டக்களப்பு.

**சர்வஜன வாக்கெடுப்பில் இடதுசாரி முற்போக்கு சக்திகளும் ஐ.தே.க வுடன் நிற்க வேண்டுமா? அல்லது எதிரணியில் நிற்க வேண்டுமா ?.**

ஐ.தே.க வை பதவிக்குக் கொண்டுவர முயற்சிக்கும் எவரும் இடதுசாரி முற்போக்கு சக்திகளாக இருக்க முடியாது. இந்த நாட்டில் இப்போது இருக்கிற அரசியல் யாப்பு நீக்கப்பட்டு ஒற்றையாட்சி முறையில் அல்லாத விரிவான அதிகாரப் பரவலாக்கலைக் கொண்ட ஒரு புதிய அரசியல் யாப்பையே இடதுசாரி முற்போக்குச் சக்திகள் வேண்டி நிற்கின்றன. அவ்வாறானவர்கள் ஐ.தே.க வுடன் எப்படி நிற்க முடியும். புதிய அரசியல் யாப்பு வேண்டாம் என்று சொல்வது. ஐ.தே.க வின் த னிப்பட்ட நலன்களை வலுப்படுத்துவதாகவே இருக்கும். அதற்காகச் செயற்படுவதுதான் இடதுசாரி முற்போக்குச் சக்திகளின் வேலையா?

என். சிவனேஸ்வரி - திருகோணமலை.

**இந்தோனேசியாவின் மேகவதி சுகர்ணோ புத்திரி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை ஜனநாயகத்தின் வெற்றியாகக் கருதமுடியுமா ?.**

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்தோனேசியாவின் சுதந்திரத்தின் தந்தையென அழைக்கப்பட்டவரும் மூன்றாம் உலக நாடுகளின் ஒற்றுமைக்காக உழைத்தவருமான சுகர்ணோ அவர்கள் படுகொலை செய்யப்பட்டு அங்கு இராணுவ சர்வாதிகாரம் ஆட்சிபீடம் ஏறியது. சர்வாதிகாரி சுஹார்ட்டோ இடைக்கிடை தேர்தல் நாடகங்களை நடத்தி தனது சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்தி எதேச்சாதிகார ஆட்சியை நடாத்தி வந்தார். ஓர் எல்லைக்கப்பால் தாங்கமுடியாத மக்களின் எழுச்சி சுஹார்ட்டோவை விரட்டியடித்தது. அதில் மேகவதி சுஹர்ணோ புத்திரியினுடைய பங்கும், பாத்திரமும் குறிப்பிடத்தக்கது. அவர் உடனடியாக ஜனாதிபதி ஆகா விட்டாலும் இப்பொழுது அவர் ஜனாதிபதியாகி இருப்பது இந்தோனேசிய மக்களின் வெற்றி என்பதில் சந்தேகமில்லை. மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் நெருக்கடிகளும், சிக்கல்களும் நிறைந்த இந்தோனேசிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பவராகவும் அவர் செயற்பட்டால்தான் இந்த மக்களின் வெற்றி உண்மையான ஜனநாயகத்தின் வெற்றியாகும்.



எஸ். ரஞ்சன் - பதுளை.

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா அவ்வளவு அக்கறை காட்டுவதாக இல்லை என்ற கருத்து நிலவுகிறதே?**

இந்தியா இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட வேண்டும் என்று கருதுபவர்களே இவ்வாறு கூறுகிறார்கள். ஆனால் இலங்கையின் விவகாரங்களில் நேரடியாகத் தலையிடக்கூடாது என்பதே இந்தியாவிலுள்ள மிகப் பெரும்பான்மையான அரசியல் தலைவர்கள் பத்திரிகையாளர்கள் மற்றும் புத்திஜீவிகளின் கருத்தாகும். இங்கு இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்போர் கூட இந்தியா தங்கள் வீட்டு வேலைக்காரன் என்ற நினைப்பிலிருந்து ஏற்படுகிறதே தவிர இந்தியா எமக்கு உதவ வேண்டும் என்ற உண்மையான எண்ணத்தில் அல்ல. இந்தியாவின் தேசிய நலன்களை பற்றி அக்கறைப்படாதவர்கள் இந்தியா உதவ வேண்டும் என எதிர்பார்ப்பது வேடிக்கையானதாகும். இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்போர் முதலில் இந்தியாவைப் பற்றியும், அதன் தேசிய மற்றும் பிராந்திய நலன்களைப் பற்றியும் புரிந்து கொள்ள வேண்டும்.

எம். சுப்பிரமணியம் - நாரஹேன்பிட்டிய.

**ஆண்டுக்கு ஆண்டு இலங்கையில் மின்சார வெட்டு நேரம் அதிகரித்துச் செல்கிறது. இப்படியே போனால் நாடு இருளில் மூழ்கி விடும் அபாயம் உண்டு. மாற்று வழி ஏதாவது உண்டா ?.**

இருக்கும் மாற்று வழிகளைப்பற்றி பேசுவதில் என்ன பயன். நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்துக்கான வேலைகள் தடைப்படா விட்டால் மேலதிக மின்சாரம் மிக விரைவாக கிடைக்க வாய்ப்புண்டு அல்லது நுரைச்சோலைக்கு மாற்றாக வேறொரு இடமாவது மிக விரைவில் தெரிவு செய்யப்படவேண்டும். வேறு மாற்று வழி எதுவுமில்லை.

ஆர். ரவிச்சந்திரன் - கல்முனை.

**க.பொ.த உயர்தர வகுப்புக்களில் ஆங்கிலத்தில் போதனை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது இதன் சாதக பாதகங்கள் என்ன ?.**

ஆங்கிலப் போதனை சிறு வயதிலிருந்தே மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. பின்தங்கிய கிராம மட்டங்கள் உட்பட பரந்துபட்ட ரீதியில் மாணவர்களுக்கு ஆங்கிலத்தைப் பயிற்றுவிப்பதற்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். க.பொ.த உயர்தர வகுப்புக்களில் ஆங்கில மூலம் பாட போதனை என ஆரம்பித்தால் உயர்மட்டத்தில் இருக்கும் சிறு குழாத்தினரின் பிள்ளைகளைத் தவிர ஏனைய அனைவரும் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்விக்குத் தகுதியற்றவர்களாவர்.

ச.பாஸ்கரன் - வத்தளை.

**மூன்றாவது மனிதன் ஏற்பாட்டில் கடந்த ஜூன் 28, 29 திகதிகளில் ஈழத்து இலக்கிய எழுத்தாளர், ஆர்வலர்களின் செல்நெறி அறிகை ஒன்றுகூடலின் போது வன்முறைக்குப் பலியான நிமலராஜனுக்கு அரங்கு அமைக்கப்பட்டது பற்றிய சர்ச்சை குறித்து என்ன கூறுகிறீர்கள்?**

சமூகத்தில் சிறுபான்மை கருத்துக்களை பிரதிபலித்து எதிர்நீச்சல் போடுவதிலும் பார்க்க ஆதிக்கம் செலுத்துகின்ற கருத்துக்களைப் பிரதிபலித்து சுலபமாக பேரும் புகழும் பெற்றுவிடலாம் என்ற பொதுவான போக்கு, எண்ணம் மூன்றாவது மனிதனையும் பீடித்திருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

நிமலராஜனுக்கு அரங்கு அமைத்துக் கௌரவித்தவர்கள், இந்த படுகொலைக்கெதிரான உணர்வை வெளிப்படுத்தியவர்கள் அவரைப்போன்றே வன்முறைக்குப் பலியான பத்திரிகையாளர்கள் நடராஜா அற்புதராஜா (ரமேஷ்), செழியன் பேரின்பநாயகம் போன்றவர்களை இந்த அரங்கில் நினைவுகூருவதற்குக் கூட முன்வரவில்லை. எனவே, இதனை வெறுமனே பத்திரிகையாளர்கள் மீதான வன்முறைக்கெதிரான செயற்பாடாக அடையாளப்படுத்த முடியவில்லை.

பத்திரிகையாளர் நிமலராஜனை நினைவுகூருதல், கௌரவித்தல் என்ற போர்வையில் அவர் சார்ந்திருந்த அரசியலை நிலைநிறுத்துவதும், இதன் மூலம் இன்றும் அவரைப்போன்று பேசுபவர்களை, எழுதுபவர்களை கனம்பண்ணுவதும், உற்சாகமூட்டுவதும் உள்ளார்ந்த நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு மூன்றாவது மனிதன் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்ற கேள்வி எனக்கும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கதை நாயகர்கள்

## புதுமைப்பித்தன்

தமிழில் கதை என்ற வடிவிலே முதன் முதலில் அச்சில் வந்தது வீரமாமுனிவர் என்ற தமிழ்ப் பெயரைப் பூண்ட இத்தாலி நாட்டுப் பாதிரியார் கொன்ஸ்டான்டியஸ் பெஸ்கி (Constantius Beschi 1680-1749) எழுதிய 'பரமார்த்த குருவின் கதை' என்ற நூலாகும். இது 1822ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து பஞ்சதந்திரக் கதைகள், கதாமஞ்சரி, ஈசாப்பின் நீதிக் கதைகள், மதன காமராஜன் கதை...... என்று பல கதை நூல்கள் அச்சில் வரத்தொடங்கின. இவ்வாறு 19ம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தமிழில் கதை படிக்கும் பழக்கமும் பரவத் தொடங்கியது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882-1921) தற்காலத் தமிழின் மறுமலர்ச்சிக்குக் கவிதைகள் மூலம் வளம் சேர்த்தார். அவருக்குப் பின்னர் உரை நடை வாயிலாக, முக்கியமாகச் சிறு கதைகள் மூலம், தமிழ் மொழிக்கு வளமும், வனப்பும், பெருமையும் சேர்த்தவர் புதுமைப்பித்தன் ஆவார்.

1920களில் தான் தமிழ்ச் சிறுகதை தற்காலப் பங்கையும் இலக்கியத் தன்மையையும் அடைந்தது எனலாம். 'மங்கையர்க்கரசியின் காதல்', 'குளத் தங்கரை அரசமரம்' போன்ற கதைகளை எழுதிய வ.வே.சு. ஐயர்தான் தமிழ்ச் சிறுகதைக்கு தற்காலத் தன்மையும் இலக்கிய வடிவமும் தந்த முதல்வர் என்று கருதப்படுகிறது. இதற்கு முன்பே பாரதியார் எழுதிய சில கதைகளும் இன்றைய சிறுகதைகளுக்கு முன்னோடிதான் என்று சொல்பவர்களும் உள்ளனர்.

1930களில் தமிழ்ச் சிறுகதை வேகமும் வனப்பும் பெற்று வளரலாயிற்று. இக் காலகட்டத்தில் தனிச் சிறுகதைப் பத்திரிகையாக உதயமான 'மணிக்கொடி' சஞ்சிகை தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் மைல்கல்லாக அமைந்தது. உலக இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடும், தேர்ச்சியும் பெற்றிருந்த திறமைசாலிகள் குழு ஒன்று தமிழ்ச் சிறுகதையில் சோதனைகளும் சாதனைகளும் செய்ய இப்பத்திரிகை களமாக



இருந்தது. இக்குழுவில் முதன்மையானவர் புதுமைப்பித்தன் (1906-1948).

இன்றும்கூட 'தமிழ்ச் சிறுகதையின் மன்னர்' என்று சொன்னால், அது புதுமைப்பித்தன்தான் என்பதில் யாருக்கும் சந்தேகம் எழுவதில்லை. காலத்தை எதிர்கொள்ள இயலாமல் பின்தங்கும் பெரும்பான்மையான படைப்பாளிகளைப் போலல்லாது காலத்தைக் கடந்துவரும் குரலாக புதுமைப்பித்தன் என்ற கலைஞன் தமிழ்க் கதை யுலகில் பதித்திருக்கும் தடம் மிக அழுத்தமானது.

புதுமைப்பித்தன் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் சிறப்பான முன்னோடி என்பது ஒன்றும் மிகையானதல்ல. இன்றும் எழுதிக் கொண்டிருக்கிற முக்கிய தமிழ் எழுத்தாளர்கள் அனைவரிடமும் புதுமைப்பித்தன் எழுத்தின் சாயலை ஏதோ ஒருவகையில் நாம் காணமுடியும். உலகத் தரத்திலான சிறுகதைகள் சிலவற்றைத் தமிழில் அவர் படைத்துத் தந்துவிட்டு போயிருக்கிறார்.

சொ. விருத்தாசலம் எனும் இயற் பெயர் கொண்ட புதுமைப்பித்தன் தமது புதுமை விருப்பத்தைப் புனைப்பெயரில் பிரதிப் பலித்திருக்கிறார். தனது சிறு கதைகளின் மூலம் தமிழையும் புதுமை செய்தார். அவர் பிரக்ஞை பூர்வமாகக் கையாண்ட அவரது கதை உத்திகள் பற்றி அவர் குறிப்பிடுகையில், "அவற்றில் கதைக்குரிய கதைப் பின்னல்கள் கிடையா. அவற்றிற்கு ஆரம்பம், முடிவு என்ற நிலைகளும் பெரும்பான்மையாகக்கிடையா. மன அவசத்தின் உருவகம் கதைகள் என்பதை ஒப்புக்கொள்வதானால் அவை கதைகள் ஆகும். இம்மாதிரியான முறையை அனுஷ்டித்து மேல் நாட்டில் கதைகள் பிரசுரமாவது சகஜம். அந்த முறையை முதல் முதலாகத் தமிழில் இறக்குமதி செய்த பொறுப்பு அல்லது பொறுப்பின்மை என்னுடையதாகும்" என்று அவர் கூறியிருக்கிறார்.

சிறு கதைகள் மட்டுமல்லாது, கவிதை, மொழிபெயர்ப்பு, கட்டுரை என்று அவர் எழுதிய வடிவங்கள் எல்லாவற்றிலும் தனது எழுத்து நடையின் விஷேடத் தன்மையால் வாசகர்களை வெகுவாகக் கவர்ந்தார். 'கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு, தாவிச் செல்லும் நடை' அவருடையது.

"20 ம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதைக்கும் புதுமையும் புத்துயிரும் கொடுத்தவர் பாரதி, தமிழ் வசனத்திற்கு புதுமையும் புத்துயிரும் கொடுத்தவர் புதுமைப்பித்தன். புதுமைப்பித்தன் தமிழ் வசன இலக்கியத்தின் சொத்து. அவர் வசன இலக்கியத்தின் மன்னர்" என்று அவருக்குப் பின் வந்த பரம்பரையினர் இன்றும் கொண்டாடும் படியாக அமைந்திருக்கிறது அவரது படைப்பாளுமை.

புதுமைப்பித்தனது எழுத்து நடைக்கும். பார்வைக்கும் உதாரணமாய் அவரது 'கவந்தனும் காமனும்' சிறு கதையிலிருந்து இந்தப் பகுதியை எடுத்துக் காட்டலாம்.

"அதோ மூலையில் சுவரின் அருகில் பார்த்தீர்களா? சிருஷ்டித் தொழில் நடக்கிறது. மனிதர்களா, மிருகங்களா? நீங்கள் போட்டிருக்கிறீர்களே பப்ளின் சேர்ட், உங்கள் ஷெல் ஃபிரேம் கண்ணாடி எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியதுதான். ரொம்ப ஜம்பமாக, நாசுக்காக கண்களை மூடவேண்டாம், எல்லாம் அந்த வயிற்றுக்காகத்தான்."

கதைக்கென் அவர் எடுத்துக்கொண்ட விஷயங்களிலும், அவற்றை கதைகளாக எழுதும் வடிவத்திலும், எழுத்து நடையிலும் புதுமை செய்தார். மரபு ரீதியான நிகழ்ச்சி அடுக்குகள் கொண்ட கதைகளைப் படித்துப் பழகிய வாசகர்களுக்கு புதுமைப்பித்தன் கதைகள் புரட்சிகரமாகவும் அதிர்ச்சி தரக்கூடியனவாகவும் இருந்தன. சமூகத்தின் அசிங்கங்களை நேர் நோக்கிப் பார்ப்பதற்கே கூச்சப்பட்டுக் கொண்டு சப்பைக்கட்டு கட்டி எழுதிக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் "நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் ஏதும் இல்லை" என்று பிரகடனப்படுத்திக் கொண்டு சமூகத்தின் அசிங்கங்களைக் கீறிப் பிளந்து காட்டியவர்.

சமுதாயத்தின் அவலங்களை முதன் முதலாகக் கண்ட ஒரு கலை உள்ளத்தின் வேதனைகளாக அவர் கதைகள் பல அமைந்திருக்கின்றன. மனிதரின் சிறுமைகளையும், வக்கிரங்களையும், வாழ்க்கை முரண்பாடுகளையும் கண்டு பரிகசிக்கிற, கிண்டல் பண்ணுகிற மனசின் குரல்களாக அநேக கதைகள் காணப்படுகின்றன.

"பேரளவு துன்பத்தின் சாயை படியாது வெறும் உயிர்ப்பிண்டமாக வாழ்ந்த ஒரு வாலிபன் திடீர் என்று உலகத்தில் இயல்பாக இருந்துவரும் கொடுமைகளையும், அநீதிகளையும் சமூகத்தின் வக்கிர விசித்திரங்களையும் கண்டு, ஆவேசமாக கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த்துச் சொல்லிய பேய்க் கனவுகள்" என்று தன் கதைகளைப் பற்றி அவரே சொல்லியிருக்கிறார். கேலியும் கிண்டலும் கலந்த, நகைச் சுவை நிறைந்த, வேகமும் அழுத்தமும் படிந்த நடை அவருடைய தனிச்சிறப்பு. சிந்தனை ஆழமும், நம்பிக்கை வறட்சியும் அவருடைய எழுத்தின் சிறப்பியல்புகளாக இயங்குகின்றன. சிறுகதையில் ஆழ்ந்த கனமான சிந்தனை வெளிப்பாடுகளை புதுமைப்பித்தன் அளவுக்குத் தமிழில் வேறு எவரும் செய்ததில்லை என்று இன்றும்கூட நாம் சொல்லமுடியும்.

இன்றும் புதுமைப்பித்தனை முழுமையாகவும், புத்துணர்ச்சியுடனும் படிக்க முடிகிறது. காலத்தை அவர் சுலபமாக வென்றுகொண்டிருக்கிறார் என்பதற்கு இதைவிடப் பெரிய தடயம் ஒன்றும் தேவையில்லை.

எஸ். சிவா

---

# குழப்பமான அரசியல் கோரிக்கைகளும்-தமிழர்களின் குழறுபடியான அரசியல் வரலாறும்

1934ம் ஆண்டு நடைபெற்ற மன்னார் இடைத்தேர்தலினூடாக டொனமூர் உருவாக்கிய சட்டசபைக்குள் நுழைந்த ஜி.ஜி. பொன்னம்பலம் தன்னைத் தமிழர்களின் தனிப்பெரும் அரசியற் தலைவனாக நிலைநிறுத்திக் கொள்ள "தமிழ்", "தமிழர்கள்", "தமிழர்களின் பெருமை" என்னும் இனஉணர்ச்சி சுலோகங்களைத் தூக்கினார். அப்போது மிதவாதம் பேசிய மகாதேவா (சேர்.பொன். அருணாசலத்தின் மகன்) வையும் அவரோடு சேர்ந்தவர்களையும் ஜி.ஜி. பொன்னம்பலம் துரோகிகளென முத்திரை குத்தி தமது "தியாக" அரசியலை நிலை நாட்டிக் கொண்டார். "தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என வீர முழக்கங்களையும் இட்டார். அவரை அவரோடு சேர்ந்தவர்கள் தமிழர்களின் "தானைத் தலைவன்" என பட்டமும் சூட்டினர்.



சி. சுந்தரலிங்கம்

டொனமூர் உருவாக்கிய சட்டசபைக் காலகட்டத்தில் அடங்காத் தமிழன் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட சுந்தரலிங்கமும் அப்போதைய முதலாளித்துவ சிங்களத் தலைவர் டி.எஸ். சேனநாயக்காவுக்கே பக்க பலமாக இருந்தார்.

1936ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் அமைந்த சட்டசபையின் அமைச்சரவையில் இருந்த ஏழு அமைச்சர்களும் சிங்களவர்களாகவே இருந்தனர். இந்த நாடு சிங்களவர்களின் நாடு என்பதை நிரூபிக்கவே அந்த தனிச் சிங்களவர்கள் மந்திரி சபையை அமைத்ததாக அப்போதைய ஆட்சித் தலைவர் டி.எஸ். சேனநாயக்காவுக்கு வலதுகரமாக இருந்த சேர்.பரன்.ஜெயதிலக்கா பெருமைப்பட்டுக் கொண்டார்.

ஆனால், அவ்வாறு சிங்களவர்களை மட்டுமே கொண்ட மந்திரி சபை அமைவதற்கான நாடாளுமன்ற கணித சூத்திரத்தை டி.எஸ். சேனநாயக்காவுக்குச் சொல்லிக் கொடுத்தவரே பின்னாளில் அடங்காத் தமிழன், மறத்தமிழன் என்று சொல்லப்பட்ட அந்த சுந்தரலிங்கம்தான் எனப் பலர் கூறுகின்றனர்.

செய்வதையெல்லாம் செய்து விட்டு இந்த திருவாளர் சுந்தரலிங்கம் அவர்கள் 1960களில் வவுனியாத் தொகுதியின் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக "சுதந்திர ஈழத் தமிழ் நாடே மானமுள்ள தமிழர்கள் வாழ ஒரே வழி" என்று தனது தமிழின உணர்ச்சியைக் காட்டியதால் உடனே மானமுள்ள மறத் தமிழரானார். இந்த சுந்தரலிங்கத்தார் பற்றிக் கூற இன்னுமொரு "பெருமையான வரலாறு" ஒன்று உண்டு.

1960களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்டும் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களாகவும் வாழ்ந்து வந்த மக்கள் தம்மைத் தாழ்த்துவதற்கு எதிராக பல்வேறு வகைப்பட்ட போராட்டங்களையும் நடத்தினர். அதில் சமமான ஆலயப் பிரவேசங்களுக்கான போராட்டங்கள் குறிப்பிடத் தக்கவை. அவற்றில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் நடைபெற்ற போராட்டம் மிகவும் பிரபல்யமான ஒன்றாகும்.

இந்தப் போராட்டங்களைப் பிரதானமாக வழி நடத்தியது தோழர் சண்முகதாசன் தலைமையில் இருந்த (சீனசார்பு) கம்யூனிஸ்ட் கட்சியே. அப்போது அக்கட்சியின் வடபிரதேச செயலாளர் பொறுப்பை வகித்தவர் தோழர் வீ. ஏ. கந்தசாமி. போராட்டக்களத்தைத் தலைமை தாங்கி நடத்தியவர்களில் எஸ்.ரி.என்.நாகரத்தினம் அவர்கள் பிரதானமானவராவார். அவரோடு தோள் கொடுத்து நின்றவர்களில் சுப்பிரமணியம், செந்தில்வேல் போன்ற சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களையும், வி. பொன்னம்பலம் மற்றும் எம்.சி. சுப்பிரமணியம் போன்ற மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களையும் குறிப்பிடலாம்.


இந்தக் காலகட்டத்தில் தமிழ் இளைஞர்களின் அரசியல் என்பது ஆரம்பமாகவில்லை. இலங்கையின் இனமுரண்பாட்டுப் பிரச்சினையில் இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் கொண்டிருந்த நிலைப்பாடுகள் பற்றியும், அவை மேற்கொண்டு வந்த நடைமுறைகள் பற்றியும் நாம் பின்னொரு தடவை விரிவாக நோக்கலாம். இங்கு மீண்டும் தமிழ் தலைவர்கள் எனும் தொடரை நோக்குவோம்.

மேற் குறிப்பிட்ட சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் போது அதனை அடக்குவதற்காக-பழைய சாதித் தடிப்பைத் தொடர்ந்தும் நிலைநாட்ட முற்பட்டவர்களுக்கு தலைமை தாங்கியவர் "அடங்காத் தமிழன்", "மானமுள்ள மறத் தமிழன்" சுந்தரலிங்கமே. இதற்கான எல்லா வன்முறைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகப் பிரயோகிப்பதில் அவர் பின்னிற்கவில்லை. கோவிலுக்குள் செல்ல முற்

**பண்டிதர்**

பட்ட போராளிகள் மீது கொதிக்கக் காய்ச்சிய எண்ணெயை ஊற்றியமை தொடக்கம் தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புக்களைக் கொழுத்துதல் வரை எல்லா அட்டூழியங்களையும் செய்வித்தார். அதற்கு யாழ்ப்பாணத் தமிழ்ப் பொலிஸ் அதிகாரமும் மறைமுகமாக உடந்தையாக இருந்தது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரவேசம் தொடர்பாக திரு.சுந்தரலிங்கம் நடாத்திய அட்டகாசங்களுக்கு பெரும்பான்மையான இந்துக்கள் ஆதரவளிப்பதாகவே அவர் நம்பினார். தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றின் பாரம்பரிய செல்வாக்குகளை மீறிய அரசியல் செல்வாக்கை தான் இந்த சாதித் தடிப்பு அட்டகாசங்கள் மூலம் அடைந்து விட்டதாக அவர் கருதிக் கொண்டதனால் என்னவோ 1970ம் ஆண்டு இடைத் தேர்தலில் இந்துவெறிப் பிரச்சார அரசியலை நடத்தினார். 1956ம் ஆண்டு தொடக்கம் காங்கேசன் துறையின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு வந்த திரு செல்வநாயகம் அவர்கள் கிறிஸ்தவர் என்பதனால்



தோழர் வீ.ஏ. கந்தசாமி

சுந்தரலிங்கம் தனது தேர்தல் வெற்றிக்காக சூலமா? சிலுவையா? என தனது சாதித் தடிப்பு அரசியலுடன் கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஓர் அரசியலையும் ஆரம்பித்தார். ஆனால் அதில் அவர் தோல்வி கண்டதனால் அப்படிப்பட்ட ஓர் இந்துவெறி அரசியல் செயற்படாமற் போனது.

உண்மையில் அன்றைய காலகட்டத்தில் கிராம மட்டங்களில் இந்த சாதிரீதியான ஒதுக்குதலானது தென்னாபிரிக்காவில் நிலவிய இனரீதியான ஒதுக்குதலின் (apatheid) பல அம்சங்களைக் கொணடிருந்தது என்றால் மிகையாகாது.

பெரும்பான்மைத் தமிழர்களின் சாதிரீதியான ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு சுதந்திரமாகவும் சரிநிகர் சமமாகவும் வாழ்தலை உறுதிப்படுத்துவதற்காக சிறுபான்மைத் தமிழர்கள் போராடிய வேளையில், பெரும்பான்மை இனமான சிங்களவர்களுடன் சரிநிகர் சமானமாக வாழ உரிமை கேட்டுக் குரலெழுப்பிக் கொண்டிருந்த தமிழ்க் கட்சிகள் என்ன செய்தார்கள் என்பது ஆழமான ஆய்வுக்குரியதொரு விடயமாகும்.

இந்தத் தமிழ் கட்சிகளில் பெரும்பாண்மையான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தது அன்றைய தமிழரசுக் கட்சியே. இக்கட்சியானது தமிழ் நாட்டில் செயற்பட்டுக் கொண்டிருந்த திராவிடர் இயக்கத்தின் சாதியமைப்பை ஒழித்தல் தொடர்பான கருத்துக்களையும், காந்தீயத்தின் தீண்டாமை ஒழிப்புக் கருத்துக்களையும் கலந்ததாக ஒரு பிரச்சாரத்தைக் கொண்டிருந்தது.

1970ம் ஆண்டு தேர்தல் வெற்றியைக் கருத்

தொடர்ச்சி 11ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலைகளிலிருந்து தமிழ்க்குரல் — காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வோம்



எமது நாடும் மக்களும் இன்றைய சீரழிவுகளுக்கு உள்ளாவதற்கு முக்கிய காரணமாய் அமைந்தவை கடந்த காலங்களில் நடைமுறைக்கு வந்த அரசியல் யாப்புக்களும், இனரீதியான நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களுமே. அதிலும் குறிப்பாக 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பு இலங்கையில் ஏற்கனவே வளர்ந்து கொண்டிருந்த இனமுரண்பாட்டை மிக மோசமான உள்நாட்டு யுத்தமாக மாற்றியது மட்டுமல்லாது, இப்பிரச்சினைகளுக்குத் தீவுகாண முயற்சித்தாலும் அதனைச் செய்ய முடியாத தடையாகவும் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிங்கள இனவெறியைக் கக்கி அரசியல் நடத்தும் ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்ற கட்சிகளைத் தவிர ஏனைய எல்லா அரசியற் கட்சிகளும் இன்றிருக்கும் அரசியல் யாப்பு மாற்றப்படவேண்டும் என்ற கருத்தையே கொண்டிருக்கின்றன. ஆனால் இப்போது அதற்கான வாய்ப்பு ஏற்பட்டும் பல அரசியல் கட்சிகள் அதற்கு மாறாக தங்களுடைய சுயநலன்களை மட்டும் அடிப்டையாகக் கொண்டு பல்வேறு விதமாக முரண்பட்ட கருத்துக்களையும் காரணங்களையும் சொல்லி 1978ம் ஆண்டு அரசியல் யாப்பை தொடர்ந்தும் நிலைநாட்ட முற்படுகின்றனர்.

இப்போதிருக்கும் அரசியல் யாப்பு முறையினால் சிறுபான்மையினர் குறிப்பாக மலையகத் தமிழ் மக்கள் கணிசமான அளவு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்தாலும் அப்பிரதிநிதித்துவங்கள் தேசிய கட்சிகளின் கீழேயே பெறப்பட்டிருக்கின்றன. மலையக மக்களின் சனத்தொகை விகிதாசாரத்தின்படி இந்தியவம்சாவழி மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைந்த பட்சம் 16 பேர் இருக்கவேண்டும் என தொழிலாளர் காங்கிரஸ் கருதுகின்றது.

1960ம் ஆண்டு தொடக்கம் 1989ம் ஆண்டு வரை மலையக மக்களுக்கு ஒருவர் அல்லது இருவர் என்ற பிரதிநிதித்துவமே இருந்தது. 1989ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஐந்து பேரும், 1994ம் ஆண்டின் பாராளுமன்றத்தில் பத்துப் பேரும் என இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரதிநிதிகள் இருந்தனர். இப்போது பாராளுமன்றத்தில் ஒன்பது பேர் உள்ளனர்.

எதிர்காலத்தில் கொண்டுவரக்கூடிய புதிய உத்தேச அரசியல் யாப்புத் திருத்தத்தில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் இனவிகிதாசாரத்தை பாதுகாக்கும் வகையிலும், குறைந்த பட்சம் பத்து அல்லது பன்னிரண்டு பிரதிநிதித்துவம் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற வகையிலும் பெரும்பான்மைக் கட்சிகளிடம் உத்தரவாதம் பெறல் வேண்டும். அது வெறுமனே இப்போதைய அரசாங்கத்திடம் மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சியிடமும் அதற்கான உத்தரவாதத்தைப் பெறல் வேண்டும். இந்த நிலைப்பாட்டை மலையகத் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி வேறுபாடுகளுக்கப்பால் உறுதியாக முன்வைக்க வேண்டிய காலகட்டமாகும்.

மலையகத் தமிழ் மக்கள் சமூகம் செறிந்து வாழும் நுவரெலியா, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இருந்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக் கூடியவாறு தேர்தல் விகிதாசார முறைகளிலும், தொகுதிவாரி முறைகளிலும் மாற்றங்கள் செய்யப்படவேண்டியது அவசியமாகிறது. விகிதாசார தேர்தல் முறைகளுக்குப் பின் இப் பிரதேசங்களில் இருந்து தனித்துவமாக இம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவில்லை. மாறாக இப்பிரதிநிதிகள் தேசிய கட்சிகளுடன் இணைந்தே பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஜே.ஆரினால் கொண்டுவரப்பட்ட விகிதாசார தேர்தல் முறையானது எந்தச் சிறிய கட்சியும் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை அளித்த போதிலும் மறு தரப்பில் ஒன்று பட்ட மக்கள் சக்தியை பிரித்தாளும் தந்திரோபாயமூலம் சிறுபான்மை மக்களின் வாக்குப்பலத்தை சிதறடிப்பதையே சாதித்துள்ளது.

இந்த அரசியல் யாப்பு முறையை கொண்டுவருவதற்கு ஜே.ஆர் அரசானது மற்றக் கட்சிகளின் அபிப்பிராயத்தையும் கேட்கவில்லை. மக்களின் அபிப்பிராயத்தையும் கோரவில்லை. ஜே.ஆர். தான் நினைத்ததை தன்னிஷ்டப்படி செய்தார். எதிர்க்கட்சி ஸ்தானத்தில் 18 பேர் த.வி.கூ இருந்த போது மலையகத்தில் இருந்து அமரர் தொண்டமான் மாத்திரமே சேவல் சின்னத்தில் போட்டியிட்டு நுவரெலியா - மஸ்கெலியாத் தொகுதியிருந்து மூன்றாவது பா.உ ஆக தெரிவு செய்யப்பட்டார்.

அப்போதே இந்த விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வந்திருந்தால் மலையகத்திலிருந்து உடனடியாகவே ஐந்து அல்லது ஆறு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்திருப்பார்கள். 1982ம் ஆண்டு சர்வசன வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத்தை நீடித்த ஜெயவர்த்தனா அப்போதும் பாராளுமன்றத்தில் மலையக மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வர முடியாமற் செய்துவிட்டார்.

1977 தேர்தல் மூலம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது நாட்டில் 30 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற்றிருந்தும் ஜே.ஆரின் 11 ஆண்டு ஆட்சிக் காலத்தில் வெறுமனே எட்டு ஆசனங்களை மட்டுமே அதாவது ஐந்து சதவீதத்துக்கும் குறைவான ஆசனங்களுடனேயே இருக்க வேண்டியேற்பட்டது. சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உரிய பிரதிநிதித்துவ சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் அது அதிகமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டு ஜே.ஆர். அரசாங்கத்திற்கு சவாலாக அமைந்திருக்கக்கூடிய நிலை தோன்றியிருக்கும்.

இதையெல்லாம் கணக்கில் எடுத்த பின்பே தனது எதிர்கால திட்டங்களின் அடிப்படையில் தான் அரசியலில் இருக்கும்வரை தொடர்ந்து தானே ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே 1982ம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பை ஜே.ஆர். நடத்தினார்

ஆனால் அப்போது தந்திரமாகவும் வஞ்சகமாகவும் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்கு தங்களுக்கு உதவிய தற்போதைய அரசியல் யாப்பு முறையை இப்போதும் நடைமுறையில் வைத்திருக்கவே ஐ.தே.க பலருடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

எதிர்வரும் சர்வஜன வாக்கெடுப்பானது புதிய அரசியல் யாப்பு முறையை கொண்டு வருவதா? இல்லையா? என்ற கேள்விக்கான விடையைக் காண்பதே. அது சந்திரிகா அவர்களின் அரசியற் பலத்தை சிறுபான்மை மக்கள் மத்தியில் பலப்படுத்தக்கூடும் என்பதே எதிர்க் கட்சியினரின் அச்சம். இதனையே அவர்கள் தலைகீழாக மாற்றி இந்த சர்வசன வாக்கெடுப்பு ஜனாதிபதி பதவியை பலப்படுத்துவதற்காகவும், பாராளுமன்ற ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதற்காகவும் எனக் கூறுகிறார்கள். ஜே.வி.பி யும் சிஹல உறுமயவும் இந்த சர்வசன வாக்கெடுப்பு நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கும், தொழிலாளர் காங்கிரஸுக்கு அதிக பிரதிநிதித்துவத்தை கப்பமாகக் கொடுப்பதற்குமே நடத்தப் படுகின்றது என்கின்றன.

சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியைத் தழுவினால் அது சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான நிரந்தரத் தோல்வியாகவே முடிவடையும். வெற்றி பெற்றால் சிறுபான்மையினருக்குரிய ஓர் அடிப்படை வெற்றியாக அமையுமாயினும் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் ஆபத்துக்குள்ளாகும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே மலையக மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தை உரிய அளவு உறுதிப்படுத்திய வகையில் சர்வசன வாக்கெடுப்பை வெற்றியடையச் செய்வது சிறுபானமையினரின் கடமையாகும்.

**இந்த அரசாங்கம் சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புக் கிடைக்காமல் சிங்கள இனவாதக் கட்சிகளுக்கு மண்டியிட வேண்டிய ஒரு நிலைமையை சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் ஏற்படுத்தினால் அது சிறுபான்மை மக்களுக்குச் செய்யும் வரலாற்று மோசடியாகவே அமையும். தெரிந்திருந்தும் தன் கண்ணைத் தானே கெடுத்துக்கொண்டு விட்டு பின்னர் சூரிய நமஸ்காரம் கிடைக்கவில்லையே என்ற முட்டாள் அரசியலை இந்த நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்கள் குறிப்பாக மலையகத் தமிழ் மக்கள் செய்துவிடக்கூடாது.**

மலையகத்திலுள்ள தமிழ்க் கட்சி எதுவும் தமக்கிடையே பகைமைகளைத் தீர்த்துக்கொள்வதற்காகவோ அல்லது தமது குறுகிய சுயநலன்களுக்காகவோ அல்லாமல், ஒற்றுமைப்பட்டு நின்று மலையக மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக குரலெழுப்பாமல், கண்மூடித்தனமாக சர்வசன வாக்கெடுப்பில் புதிய அரசியல் யாப்பு வேண்டாம் என்பதற்கு வாக்களிக்கும்படி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்த்து நின்றால் அவர்களை மலையக மக்கள் மிகவிரைவில் ஒதுக்கி வைக்கும் நிலை ஏற்படும்.

மலையக மக்களின் வாக்குப்பலம், தொழிற் சங்கப் பலம், இலங்கையின் பொருளாதாரத்தில் மலையக மக்கள் கொண்டுள்ள பலம், இந்தியாவின் பின்னணிப் பலம் என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு மலையகத்தின் அனைத்து அரசியற் சக்திகளும் ஒருமுகமாகச் செயற்பட வேண்டும்.

**குறிஞ்சி குமார்**

## குழப்பமான அரசியல் கோரிக்கை......

10ம் பக்கத் தொடர்ச்சி

தில் கொண்டிருந்த தமிழரசுக் கட்சி "நடுநிலை"யை எடுத்துக் கொண்டது. பத்திரிகைகளில் வேண்டுகோள்களை விடுத்தல் என்பதற்கு மேல் பெரிதாக எதிலும் ஈடுபடவில்லை. சாதியமைப்புக் கொடூரங்களுக்கு எதிராக தமிழரசுக் கட்சி கொண்டிருந்த கருத்துக்களெல்லாம் வெறுமனே போட்டோவுக்குப் போஸ் கொடுக்கும் பாசாங்கு அரசியலை மட்டுமே கொண்டிருந்தது எனலாம்.

அதேவேளை தமது கீழ் மட்டக் கிளைகளிலும், தமது வாலிப முன்னணி இளைஞர்கள் மத்தியிலும் இந்தப் போராட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் இவ்வாறான போராட்டங்கள் தமிழர்களைப் பிளவுபடுத்திவிடும் என்றும் தமிழர்களின் இனரீதியான உரிமைப் போராட்டங்களைப் பலவீனப் படுத்திவிடும் என்றும் பிரச்சாரம் செய்தனர். அதனது அர்த்தம் இவ்வாறான சாதி ஒழிப்புக்காகக் காத்திரமான முறையில் நடாத்தப்படும் போராட்டங்களில் பங்குபற்ற வேண்டாம் என்பதேயாகும்.

தமிழரசுக் கட்சியினரைப் பொறுத்தவரையில் இப்போராட்டங்களைத் தலைமை தாங்கி நடத்தியவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்பதுவும் ஒரு பிரச்சினையாகும். தமது தேர்தல் நோக்கங்கள் என்பதோடு, தம்மைப் பின்பற்றும் இளைஞர்கள் இந்த சாதி ஒழிப்புப் போராட்டங்களில் பங்குபற்றினால் கம்யூனிஸ்ட் கொள்கைகளால் ஈர்க்கப் பட்டுவிடக்கூடும் என்ற அச்சமும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மத்தியில் நிலவியது எனக் கூறமுடியும்.

இவ்வாறாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகள் சாதிக் கலவரத்தால் எரிந்து கொண்டிருந்த போது தமிழர்களின் மற்றதொரு பெரிய கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியானது எதுவுமே நடக்காதது போல, எதையுமே கண்டு கொள்ளாமல் அமைதியாக இருந்தது. 1940 களில் பரந்துபட்ட தமிழர்களின் பாராளுமன்றக் கட்சியாக விளங்கிய தமிழ்க் காங்கிரஸ் கட்சியானது 1960களில் தமிழர்கள் மத்தியிலுள்ள உயர் குழாத்தினரின் கட்சியாக மாறியிருந்தமையால், உண்மையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்ப்பாணப் பிரமுகர்கள் அனைவரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு எதிராகவே இருந்தனர் எனின் மிகையாகாது.

1930களின் இறுதிப் பகுதியில் இலங்கையில் மீண்டும் ஓர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான அலை எழுந்தது. இந்தவேளை தமிழர்கள் சார்பில் தலைமை வகித்தவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம். சட்ட நிபுணத்துவமும், பேச்சாற்றலும் நிறைந்த பொன்னம்பலம் மிகுந்த செல்வாக்கு மிக்க தமிழ்த் தலைவரானார். தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல இலங்கையின் அனைத்து சிறுபான்மை மக்களின் பிரமுகர்கள் மத்தியிலும், இலங்கையிலிருந்த ஐரோப்பியர்கள் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மத்தியிலும் மரியாதைக்குரியவரானார். இன்னும் மேலும் கூறினால் பிரித்தானியாவின் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும், லண்டனிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பிரதானமான பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மத்தியிலும் கூட பொன்னம்பலம் மிகவும் அறிமுகமானார். இலங்கையின் சட்டசபையில் மட்டுமல்ல நீதிமன்றங்களிலும் பொன்னம்பலம் சட்ட வல்லமை கொடிகட்டிப் பறந்தது. பொன்னம்பலத்தை மிஞ்சிய அரசியல், சட்ட மற்றும் பேச்சு வல்லமை கொண்ட தமிழன் இலங்கையில் வேறு யாருமில்லை என்றதொரு நிலைமை 1930களிலும் 1940களிலும் நிலவியது.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஸ்தாபக கர்த்தாவான சேர் பொன் அருணாசலம் பிள்ளை 1924ல் தமிழர் மகாசபையை ஆரம்பித்து, தமது அரசியற் கோரிக்கையாக சட்ட நிரூபண சபையில் சிங்களவர்கள் தமிழருக்கான பிரதிநிதித்துவ விகிதம் இரண்டுக்கு ஒன்று(2:1) என அமைய வேண்டும் என்பதையே கூறி வந்தார். டொனமூர் கமிஷனிலும் அதையே வலியுறுத்தினார்.

டொனமூர் கமிஷன் உருவாக்கிய சட்டசபை இலங்கையில் முதன்முதலாக அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இனங்களின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் என அச்சட்ட சபையில் வழங்கப்படாவிடினும், அந்த சட்டசபையிலிருந்த உறுப்பினர்களின் இனரீதியான விகிதங்களைப் பார்ப்பின், இலங்கையின் அன்றைய மொத்த சனத் தொகையில் அறுபத்தொன்பது சதவீதத்தைக் கொண்டிருந்த சிங்களவர்கள் சட்டசபையில் இனரீதியில் ஐம்பத்தெட்டு வீதத்தினரே இருந்தனர் என்ற உண்மையையும் அது இலங்கையின் சிறுபான்மையான மக்களுக்கு எந்தவித பாதுகாப்பையும் தரவில்லை என்பதையும் இங்கு அவதானத்திற் கொள்வது அவசியமாகும். அப்படி இருக்கக் கூடியதாகத் தான் டீ.எஸ்.சேனநாயக்கா மற்றும் சேர் பரன் ஜெயதிலக்கா போன்றோர் தனிச்சிங்களவர் மந்திரி சபை அமைத்துக் காட்டியதையும் இங்கு குறிப்பிடலாம்.

1934ல் சட்ட சபைக்குள் புகுந்த பொன்னம்பலம் ஆரம்பத்தில் சிங்களவர்களுக்கும் சிறுபான்மை இனங்களுக்குமான பிரதிநிதித்துவங்களின் விகிதம் பதின்மூன்றுக்கு ஏழு (13 : 7) என அரசியல் யாப்பு பூர்வமாக அமைய வேண்டும் என்றகொள்கையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால் 1940ல் புதிய அரசியல் யாப்புக்கான விவாதங்கள் ஆரம்பித்த போது ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது (50:50) என்ற கோஷத்தை முன்வைத்துக் குரலெழுப்பினார்.

## இரங்கல்

### தோழர் சிவா (சிதம்பரசபாபதி சிவவடிவேல்)



தோழர் சிவவடிவேல்(சிவா) அவர்களின் மறைவுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது. மூன்று பிள்ளைகளின் தந்தையான தோழர் சிவா 1980களின் இறுதிப்பகுதியில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இணைந்து பணியாற்றியவர். பல்வேறு சமூகப் பணிகளை அவர் ஆற்றியுள்ளார்.

தோழர் சிவா ஒன்பது வருடம் மலேசியாவில் வசித்தவர். வதிவிட அனுமதி மறுக்கப்பட்டதால் அங்கிருந்து திரும்ப வந்து மீண்டும் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இணைந்துவேலை செய்தார். அவர் ஜனநாயகபூர்வமான சட்டபூர்வமான பணிகளிலேயே ஈடுபட்டிருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை அழிக்கும் எமது சமூகத்தைப்பீடித்திருக்கும் பிணியே அவர் உயிரைக் காவு கொண்டது. அவர் திருமலை வைத்தியசாலை படுக்கையில் வைத்தே படுகொலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regd. in the Dep. of Posts of Sri Lanka under (No: QD/41/News/2001

# டொனி பிளேயர்



அண்மையில் நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி முதலாவது முக்கியத் துவம் கல்விக்கு. இரண்டாவது முக்கியத்துவமும் கல்விக்கு, மூன்றாவது முக்கியத்துவமும் கல் விக்கே என்று பிரச்சாரம் செய்தது.

ஆசிரியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்தது. தொழிற் கட்சி வெற்றிவாகை சூடியதற்கு இதுவும் ஒரு பிரதான காரணம் என்கிறார்கள்.

ஆனால், எமது நாடு முதலாவதும் வன்முறை. இரண்டாவதும் வன்முறை, மூன்றாவதும் வன் முறை என்று அழிவை நோக்கியல்லவா ஊக்கப் படுத்தப்படுகிறது.

டொனி பிளேயர் ஐரோப்பிய யூனியனில் பிரிட்டன் இணையவேண்டியதன் அவசியத்தை தனது கருத்தாக தொடர்ந்து வலியுறுத்துகிறா ராம். தொழிற் கட்சியினுள் அதுபற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கள் கன்சர்வேட்டிவ் அதிதீவிர வலதுசாரிகளின் கடும் எதிர்ப்பு நிலவினாலும் இவ்வாறு வெவ்வேறு விதமான அபிப்பிராயங்கள் இருப்பதையும் ஒப்புக் கொண்டு ஐரோப்பிய யூனியனுள் சேருவதன் அவசியத்தை வலியுறுத்து கிறாராம் பிளேயர். பிளேயரின் தனித்துவமே தனித்துவம்.

# சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க



ஐ.தே.க வின் 17 வருட அடக்குமுறை ஆட்சிக்கு எதிரான ஜனநாயக இடதுசாரி இயக்கத்தின் முன்னணித் தலைவ. ராக இருந்தவர், இவரது கணவர் விஜய குமாரணதுங்க 1980 களின் இறுதிப் பகுதியில் வீட்டு வாசலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டபின் கணவர் தலைமை தாங்கிய இயக்கத்தை ஜனநாயக முற்போக்கு இடதுசாரி சக்திகளுடன் இணைந்து முன் எடுத்துச் சென்று வெற்றிவாகை சூடியவர்.



# ஆசியாவில் பிரகாசிக்கும் பெண்கள்

## மேகவதி சுகர்ணோ புத்திரி

அறுபதுகளின் நடுப்பகுதியில் இந்தோனேசிய சுதந்திரப் போராட்ட வீரரும் முன்னாள் ஜனாதிபதியும், ஜனநாயக அரசியல் வாதியுமான சுகர்ணோவின் மகள். ஏறத்தாழ முப்பத்தைந்து வருடங்களின்பின் இந்தோனேசியாவில் ஜனநாயகம் மலர்ந்துள்ளது.

மூன்று தசாப்தங்களாக சுகர்ட்டோ நடத்திய எதேச்சாதிகார ஆட்சி முடிவுக்குவந்து கடந்த இரண்டு மூன்று வருடங்கள் ஜன நாயகத்திற்குமாறும் காலகட்டமாக அமைந்திருந்தது சிறிது காலம் ஹஹீட் பதவி வகித்த பின் தற்போது மேகவ்தி பதவியேற்றுள்ளார்.

பல்வேறு இனவாதப் பிளவுகளுக்குள் சிக்குண்டு இருக்கும் 13,500 தீவுகளைக்கொண்ட இந்தோனேசியா புதிய ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் சவால்களை எவ்வாறு முகம் கொடுக் கப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



# அரோயா


பிலிப்பைன்ஸ் கடந்த இரண்டு தசாப்தங்களாக அரசியல் கொந் தளிப்புகளுக்குப் பெயர் பெற்ற நாடு. அரசு ஜனநாயக விரோதமானதென் றால் பிலிப்பைன்ஸ் மக்கள் வீதியில் இறங்கி கவிழ்த்துவிடுவார்கள். அவ்வாறுதான் 1980களின் நடுப்பகுதியில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பிலிப்பைன்ஸை தனது வீட்டுச் சொத்துப்போல் சூறையாடிய பேர்டினன் மார்க்கோசையும் அவரது கூட்டத்தாரையும் கவிழ்த்து படுகொலை செய்யப்பட்ட ஜனநாயக அரசியல்வாதி அக்கினோவின் மனைவி ஹொரசின் அக்கினோ பதவிக்கு வந்தார்.

அந்தப் பெண்மணிக்குப் பின்னர் தற்போது எர்சாடா ஆட்சியை மக்கள் ஆதரவுடன் கவிழ்த்து குளோரியா மகாபகல் அரோயா பதவிக்கு வந்துள்ளார்.



# ஷேக் ஹசீனா

வங்கச் சிங்கமென அழைக்கப்பட்ட முஜீபுர் ரஹ்மானும் அவரது குடும்பமும் இராணுவ சதிப்புரட்சியினால் அழிக்கப்பட்ட பின்னர் அவரின் குடும்பத்தில் எஞ்சியவர்களில் ஒருவர் ஷேக் ஹசீனா. அவர் பதவிக்கு வரும்போது ஜனநாயக சக்திகளுக்குப் பலவிதமான எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும் இன்று பரவலான விமர்சனங்களும் உண்டு. ஆனால் முன்னர் இருந்த ஆட்சியாளர்களை விட எவ்வளவோ பரவாயில்லையென்று சொல்லலாம்.




# ஸ்ரீ லங்கா

## அதிகாரத்தின் அகங்காரம்

## புனைவுகளும் சீரழிவுகள் படுகொலைகளும்

மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த கலாநிதி ராஜன் கூல் அவர்கள் இந்நூலை ஆக்கில மொழியில் ஆக்கியுள்ளார். 500 பக்கங்களைக் கொண்டது. 1983 இன் பின்னர் இந்த நாட்டில் வீசிய அரசியல் புயல்கள், மனித உரிமை மீறல்கள், ஜனநாயக மீறல்கள் பற்றிய பல உருப்படியான தகவல்களை இந்நூல் வழங்குகிறது. இந்நூல் ஒரு வரலாற்று ஆவணமும் ஆகும்.



# அங் சாங் சுகி

மியன்மாரின் சிறையில் வாடும் அங் சாங் சுகி மியன்மார் மக்களின் மனச்சாட்சியின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறார். நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிடக்கூடிய ஒரு பெண் தலைவர் அவர். மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இவர் அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் -141A, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது